விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 65 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை (18.09.2012) | பக்கங்கள்: பதினாறு

# கண்ணிவெடியகற்றல், மீள்குடியேற்றம்: ஐ.நா.அதிகாரிகள் யாழ்.நகரில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்துக்கு விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் வடக்கில் இடம்பெறும் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகள், மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று வடமாகாண அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் நேற்றுத் திங்கட்கிழமை

02



நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த ஐ.நா.மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் மீள்குடியேற்ற நிலவரங்களை நேரில் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## ஐ.நா.மனித உரிமை அதிகாரிகள் யாழ்.ஆயரை சந்தித்துப் பேசினர்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான வாழ்வாதார உதவிகள் சரியான முறையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே மீள்குடியேறியுள்ள மக்கள் வாழ்ந்து வருவதாக ஐ.நா மனித உரிமை ஆணையக அதிகாரிகளிடம் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள்

02

## இலங்கை அரசு வெளிப்படை தன்மையுடன் செயற்பட வேண்டும்

### பிரித்தானிய எம்.பி.ரொபர்ட்டா

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் கூடுதல் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டுமெனபிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபர்ட்டா பிளக்மான் தெரிவித்துள்ளார்.

மீள் அபிவிருத்தி மற்றம் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்கள்தொடர்பில் இலங்கை அரசாங்கம் கூடுதல் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பது தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கில் பாரியளவில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக தமக்குத் தோன்றவில்லை என அவர்

02

## மாலக சில்வாவுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இராணுவ அதிகாரி ஒருவரை தாக்கியதாகக் கூறப்படும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா, ரெஹான் விஜயரட்ன மற்றும் 5 பேரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

24ஆம் திகதி சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவார்களெனவும் நீதவான் கூறினார்.

இராணுவ அதிகாரி ஒருவரை தாக்கியதாகக் கூறப்படும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா, ரெஹான் விஜயரட்ன மற்றும் வேறு சிலரும் கொம்பனித்தெரு பொலிஸில் நேற்று திங்கட் கிழமை காலை சரணடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## தரம் 5புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் 30ஆம் திகதிக்கு முன்

(கொழும்பு)

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் புஸ்பகுமார நேற்றுத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட மூன்று மாகாணங்களிலும் தேர்தல் காரணமாக விடைத்தாள் திருத்தும் பணிகள் முழுமையாக நிறைவடையவில்லை. அவ்வாறு முழுமையடையாத விடைத்தாள்கள் அடங்கிய பக்கற்றுக்களை பரீட்சைகள் திணைக்களத்திற்கு வரவழைத்துத் திருத்தும் பணிகளை முன்னெடுத்து வருகிறோம். 30 ஆம் திகதிக்கு முன்னதாக பெறுபேறுகள் வெளியிட்டு வைக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

அத்துடன் நடந்து முடிந்த பரீட்சை வினாத்தாளோ அதன் ஒரு பகுதியோ அல்லது வினாக்களோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கு முன்னர் வெளியாகவில்லை என்பது பொலிஸ் விசாரணைகள் ஊடாக உறுதியாகியிருப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர்

02

## மட்டு.சிறைச்சாலை கூரை மீதேறி 6 கைதிகள் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள 6 சிறைக்கைதிகள் நேற்று திங்கட்கிழமை காலையிலிருந்து கூரை மீதேறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள அதிகாரிகளை மாற்றி தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமெனவும் சிறைக் கைதிகளுக்கான உணவு சரியாக வழங்க

02

## இந்திய இராணுவ இரகசியத்துடன் இலங்கை தப்பிவர முயன்றவர் கைது

(திருச்சி)

இந்திய இராணுவ இரகசியங்கள் அடங்கிய சீ.டி.யுடன் (இறுவட்டு) இலங்கைக்கு தப்பிவர முயன்றதாகக் கூறப்படும் நபரொருவர் திருச்சி விமான நிலையத்தில் வைத்து இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர்மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெளிநாட்டுப் பொருட்களை வாங்கி விற்பனை செய்து வரும் மேற்படி நபரிடம் இந்திய இராணுவ ரகசியங்கள் அடங்கிய சீ.டி

02

## நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளிக்கின்றேன்

### அமைச்சர் மேர்வின் சில்வா

(கொழும்பு)



தனது மகனுக்கான தான் வருந்துகின்றபோதிலும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவை தான் மதிப்பதாக ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார். ஒரு பௌத்தர் என்ற வகையில் இதை தன்னால் சகித்துக்கொள்ள முடியும் எனக் கூறிய அமைச்சர் மேர்வின் சில்வா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் சட்டத்தின் ஆட்சி அமுலில் உள்ளது என்பதை இந்நீதிமன்ற உத்தரவு வெளிப்படுத்துவதாகவும் கூறினார்.

# மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி முல்லைத்தீவில் கவனயீர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு பிரதேச மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தக் கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இவ்வாறான செயற்பாடுகளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள குழுவினரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கேப்பாபிலவு கிராம மக்கள் இன்னமும் மீள்குடியமர அனுமதிப்படவில்லை.

இக்கிராம மக்களை அவர்களது விருப்பங்களுக்கு மாறாக வேறு இடங்களில் குடி யேற்றுவதற்கும் அரசு நடவ டிக்கை எடுத்துள்ளது.

# சகலகலாவல்லி மாலை விருத்தப்பா ஓதற் போட்டி

மருதனார்மடம்

மாணவர்களிடையே இறை உணர்வு, ஆன்மீக ஞானம், இசையுடன் பாடும் திறன்பெறல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிடையே சகலகலாவல்லி மாலை விருத்தப்பா ஓதற் போட்டி நடைபெறவுள்ளது.

10ஆம் 11ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கு பிரிவு - 1 எனவும், 12ஆம் 13ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கு பிரிவு - 2 எனவும் ஆண், பெண்களுக்குத் தனித்தனியாக போட்டி நடைபெறும்.

பாடசாலை மட்டப் போட்டியைத் தொடர்ந்து கோட்ட மட்டப் போட்டிகள் அடுத்தமாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்படும் வலய மட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 13ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

வலய மட்டத்தில் வெற்றிபெறுபவர்களுக்குரிய பரிசில்கள் நவராத்திரி விழாவின்போது வழங்கப்படவிருக்கிறது.

# மு.காவின் மத்திய கிளையை கூட்டுமாறு கோரிக்கை

மு.காவின் திருகோணமலை தேர்தல் தொகுதிக்கான மத்திய கிளையை அவசரமாக கூட்டுமாறு திருகோணமலை மாவட்ட மு.கா. அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் வரலாம். போகலாம் ஆனால் கட்சியினுடைய செயற்பாடுகள் உறங்கு நிலையில் இருக்கக் கூடாது.

அவசியம் ஏற்படின் புதிய அமைப்பாளர்களும் மத்திய கிளை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலொன்று வரும் பட்சத்தில் எமக்கென்றவொரு தனித்துவம் இருக்கிறது.

மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் கனவு முதலமைச்சர்கள் கூடுகின்ற போது முஸ்லிம் முதலமைச்சருக்கான தனியான கதிரை-யொன்று ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். அது ஏன் மு.காவின் முதலமைச்சராக இருக்கக்கூடாது எனக் கேள்வி எழுப்பினார்.கிழக்கு மாகாண சபையில் மு.காக்கான அரசி யல் அதிகாரமொன்று இல்லாது அபிவிருத்தியில் பின் தள்ளப்பட்டு விட்டோம்.

எதிர்காலத்தில் மு.கா. மத்திய கிளையின் வழிகாட்டலில் எமது செயற்பாடுகள் இருக்கும் என்றார்.

# மானிப்பாய் இந்து இரண்டாவது இடம்

அளவெட்டி

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென் சேவியர் இந்துக் கல்லூரி சம்பியனாகியதுடன் யாழ்.மாவட்ட பாடசாலையினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளது.

கருத்துறை கல்வியற் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதிப்போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் மன்னார் சென் சேவியர் கல்லூரி வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அனைத்துப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி நேற்றுக்காலை இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியினை 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றதுடன், இறுதிப் போட்டியில் கடுமையாக போராடிய போதிலும் வெற்றிபெற்றதுடன், இறுதிப்போட்டியில் கடுமையாக போராடிய போதிலும் வெற்றியை நழுவவிட்டது.

ஆயினும் யாழ்.மாவட்ட பாடசாலை அணியொன்று நீண்ட காலத்தின் பின் தேசிய மட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் கலந்துகொண்டதுடன் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டிருப்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

இதற்கு முன்பு மானிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழகத்தில் ஆட்டோச் சாரதி தீக்குளிப்பு

தமிழகத்தின் சேலம் பகுதியில் இன்று காலை ஒருவர் தீக்குளித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சேலத்தில் முச்சக்கர வண்டி சாரதியான விஜயராஜ் என்பவரே தீக்குளித்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார். சேலம் பேருந்து நிலையத்துக்கு முன்னால் வந்த அவர் மண்ணெண்ணெயை உடலில் ஊற்றிக்கொண்டு தலைவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியுள்ளார்.

அதன்பின்னர் திடீரென உடலில் தீ வைத்துக்கொண்டுள்ளார். அங்கிருந்த பொதுமக்கள் உடன-டியாக அவரை சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு ஆயுதங்கள், டாங்கிகள், கனரக விமானங்கள் கொடுத்து தமிழர்களுக்கு இந்திய அரசு தொடர் துரோகம் இழைத்துள்ளது. இந்த மத்திய அரசும், சோனியா காந்தியும் இன்னும் திருந்தவில்லை. இனியாவது இவர்கள் திருந்த வேண்டும் என்றும் கூறினார்.

# இந்திய இராணுவ...(தொடர்)

இருப்பதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்தே அவர் விமான நிலையத்தில் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகளுடன் தனக்கு தொடர்பிருப்பதாகவும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்திடம் குறித்த சீ.டி.யை கொடுக்கவே தான் இலங்கை பயணிக்க முயன்றதாகவும் பொலிஸாரிடம் சந்தேகநபர் கூறியுள்ளார்.

இதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப் பிறகு திருச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில்

# இலங்கை அரசு...(தொடர்)

குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமெனக் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதேச மக்களுக்கு பொறுப்புக்களை வழங்கும் வகையிலான அதிகாரப் பகிர்வுதீர்வினை வழங்குவது பொருத்தமான அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானிய பயண எச்சரிக்கை தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுமேபேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜதந்திர ரீதியில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மட்டு.சிறைச்சாலை கூரை...(தொடர்)

வேண்டுமெனவும் சிறைக் கைதிகளின் மருத்துவ விடயங்களில் முழு அக்கறை செலுத்த வேண்டுமெனவும் கோரியே இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்ற சிறைக்கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படாதுவிடின்,

இது சாகும் வரையிலான உண்ணாவிரதமாக தொடருமென உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதியொருவர் கூறினார்.

இதுவரைகாலமும் பின்பற்றப்படாமலிருந்த சில நடைமுறைகளை பின்பற்றுமாறு அனைத்துச் சிறைச்சாலைகளுக்கும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினரால் கடந்த வாரம் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில், மட்டக்களப்புச் சிறைச் சாலையிலுள்ள கைதிகள் அனை வரும் ஒவ்வொரு பிரிவாகச் சென்று உணவை பெற்றுக்கொள்ள வேண்டு மென்று நேற்று அறிவுறுத்தப் பட்ட நிலையில், இதற்கு மறுப் புத் தெரிவித்த ஜி பிரிவிலுள்ள சுமார் 35 பேர் தங்களது இருப் பிடங்களுக்கு கொண்டுவந்து உணவை தர வேண்டுமெனக் கூறி ஞாயிற்றுக்கிழமை உணவை பெற்றுக்கொள்ளவில்லை.

இவர் களில் ஆறு பேர் நேற்று திங்கட்கிழமை காலையிலிருந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலையைச் சேர்ந்த அதி காரியொருவர் தெரிவித்தார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்ற கைதிகளுடன் சிறைச்சாலை அதிகாரிகள் சுமூகமாக பேசியும் அவர்கள் உண்ணாவிர-தத்தைக் கைவிடவில்லையெனவும் அவ் அதிகாரி கூறினார்.

# தரம்...(தொடர்)

சுட்டிக்காட்டினார்.

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற சந்தேகத்திற்குரிய பிரதேசங்களில் சி.ஐ.டி.யினர் விரிவான விசாரணைகளை நடத்திய பின்னரே இத்தீர்மானத்தை அறிவித்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் மற்றும் சி.ஐ.டி. பணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் இட்டு ஒன்பது பக்க அறிக்கையொன்றினை தமக்கு சமர்ப்பித்திருப்பதாகவும் ஆணையாளர் கூறினார்.

# ஐ.நா.மனித உரிமை...(தொடர்)

ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வட அமெரிக்க பிரிவுக்கான பொறுப்பாளர் ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி,

ஜனநா யகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சொலேரா ஆகியோர் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகத்தை நேற்று மதியம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் யுத்தம் முடிந்து அரசாங்கம் அபிவிருத்தி வேலைகளை செய்து வந்தாலும் யுத்தத்திற்கான காரணங்கள் தொடர்பாக அராய்ந்து அதற்குரிய தீர்வை வழங்க இன்னமும் முன்வரவில்லை.

ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்றால் அரசாங்கம் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும்.

அவ்வாறு தேர்தல் நடைபெற்றால் மாத்திரமே இங்கு ஜன நாயகம் மலரும் என்றும் இது தொடர்பாக அவர்களிடம் மகஜர் ஒன்றும் கைளிக்கப்பட்டுள்ளது.

# கண்ணிவெடியகற்றல், ...(தொடர்)

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வட அமெரிக்க பிரிவுக்கான பொறுப்பாளர் ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சொலேரா ஆகியோரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

வடமாகாண பிரதம செயலாளர் அலவலகத்தில் விசேட சந்திப்பொன்றில் ஈடுபட்ட இவ் அதிகாரிகள், வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார அபிவிருத்திகள், கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள், மீள்குடியேற்றம் ஆகியன தொடர்பில் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அரியாலை, நாவல-டிப் பிரதேசத்திற்கு இவர்கள் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இங்கு மீள்குடியேறியுள்ள மக்களை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இவ் உயரதிகாரிகள் கலந்துரையாடியதுடன், அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்தனர்.

அத்துடன், இந்திய அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தையும் இவ் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

# கிழக்கு முதலமைச்சர் பதவியை கொடுக்க முடியும் இதைவிட மு.கா.வுக்கு எதை விட்டுக்கொடுப்பது?

## இரா.சம்பந்தன் கேள்வி

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க வேண்டும் என்று மக்கள் ஆணை தந்துள்ளனர். இதனால் இந்த ஆணையை மீறாது ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க முஸ்லிம் காங்கிரஸ் முன்வரவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியிருந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினருக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் தூதுக்குழுவுக்குமிடையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.


இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ், முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டுமென்ற ஆணையை வழங்கியுள்ளனர். நாம் ஒருமித்து ஆட்சி அமைப்பதையே தமிழ், முஸ்லிம் சமூகம் விரும்புகின்றது.

இந்த ஆணையை மீறாத வகையில் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட வேண்டும். தமிழ், முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பதால் மாத்திரமே சிறுபான்மையினரது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காண முடியும். அத்துடன் அரசியல் தீர்வுக்கும் அது அத்திபாரமாக அமையும். நாம் இரு தரப்பினரும் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதே சிறுபான்மையினரின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒரே வழியாகும்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக போராடியுள்ளனர். இதற்காக பல அர்ப்பணிப்புக்களையும் அவர்கள் செய்துள்ளனர். இதேபோல் முஸ்லிம் மக்களும் அழிவுகளை சந்தித்துள்ளனர்.

எனவே இத்தகைய அர்ப்பணிப்புகளுக்கெல்லாம் தீர்வாக கிழக்கு மாகாண சபையில் நாம் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க வேண்டும். கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சர் பதவியை முஸ்லிம்களுக்கு விட்டுத்தருவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இதனைவிட எத்தகைய விட்டுக்கொடுப்பினை நாம் மேற்கொள்ள முடியும். தேர்தலின் போது எமக்கு 11 ஆசனங்களும், முஸ்லிம் காங்கிரஸுக்கு 7 ஆசனங்களும் கிடைத்துள்ளன. இருந்த போதிலும் முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பவும், நட்புறவை உறுதிப்படுத்துவதற்குமாகவே முதலமைச்சர் பதவியை நாம் விட்டுத்தர முன்வந்துள்ளோம். நாம் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும். இதற்கான முடிவினை முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கும் என நம்புகின்றோம்.



இந்த முடிவுக்காக நாம் காத்திருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார். இதன் போது கருத்துத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணசபையில் யாருடன் இணைந்து ஆட்சி அமைப்பது என்பது குறித்து நாம் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை. கருத்துக்களையே பரிமாறி வருகின்றோம். விரைவில் நல்லதொரு முடிவினை அறிவிப்பேன் என்று கூறியுள்ளார்.

## கிழக்கு மாகாண சபை விவகாரம்:

# அரசின் அழைப்புப் பொதுவானது; கூட்டமைப்புக்கு மாத்திரமானதன்று

## அமைச்சர் கெஹலிய

அரசாங்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. இங்கு யார் வேண்டுமானாலும் வரலாம், போகலாம். ஆனால் கேட்பதை-யெல்லாம் கொடுப்போம் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது என அமைச்சரவை பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.


கிழக்கு மாகாணத்தில் சர்வ கட்சி ஆட்சி அமைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு மாத்திரமல்ல, ஏனைய கட்சிகளுக்குமான பொதுவான அழைப்பையே அரசு விடுத்துள்ளது. எனவே அரசின் கொள்கைகள் மற்றும் தேசிய நல்லிணக்கம் போன்றவை தொடர்பில் இணக்கப்பாடுடனான ஒன்றிணைந்த சர்வ கட்சி ஆட்சியினையே கிழக்கில் அரசு விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தொடர்ந்தும் கூறுகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் வெளிப்படையாக அரசின் கொள்கைகள் தொடர்பில் கூறியுள்ளார். அதாவது அனைவருக்கும் எப்பொழுதும் அரசாங்கம் கதவைத் திறந்தே வைத்துள்ளது. இங்கு யார் வேண்டுமானாலும் வந்து போகலாம். கட்டாயம் என்றில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் வெளிப்படை தன்மையினையும் திறந்த கொள்கையினையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய நல்லிணக்கம், ஐக்கியம் மற்றும் பாதுகாப்பு போன்றவை உறுதிப்படுத்தும் வகையிலேயே தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்தில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்த ஆட்சியொன்றுக்கான அழைப்பை அரசு திறந்தளவில் அறிவித்துள்ளது. எனவே கூட்டமைப்போ ஏனைய கட்சிகளோ ஒன்றிணைந்து செயற்படலாம். ஆனால் நிபந்தனைகள் மற்றும் அழுத்தங்களுக்கு அடி பணிந்து கேட்பதையெல்லாம் அரசு கொடுத்துவிடும் என்றும் யாரும் நினைத்துவிடக்கூடாது. இது சாத்தியப்படவும் போவதில்லை. அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படவே விரும்புகின்றது என்றார்.

# முன்னேஸ்வரம் காளி கோயிலில் மிருக பலி பூஜை நடைபெறாது

## பிரதம குரு சிவபாதசுந்தரம்

முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மிருக பலி பூஜை இந்த முறை நடைபெறாது என்று அந்தக் கோவிலின் பிரதம குரு காளிமுத்து சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.



இதற்கான காரணம் குறித்து அவர் விளக்கமளிக்கவில்லை. எனினும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தொடர்ச்சியான அழுத்தங்களினால் இந்தப் பூஜை நிறுத்தப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து இந்துக் கோவில்களிலும் இவ்வாறான மிருக பலி பூஜைகள் இடம்பெறுகின்றனவா இல்லை என்பது தொடர்பில் தாம் ஆராயவிருப்பதாக மேர்வின் சில்வா எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மிருகபலிக்கு எதிராக பல பௌத்த அமைப்புக்களினாலும் அமைச்சர் மேர்வின் சில்வாவினாலும் பல போராட்டங்கள் தொடர்ந்தன.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க மிருகபலி பூஜையை நிறுத்துவதற்கு சிலாபம் பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகம் தீர்மானித்தது.

எனினும் திட்டமிட்டபடி மிருக பலி பூஜை இவ்வாண்டின் பிறிதொரு தினத்தில் இடம்பெறும் என பிரதம பூசகர் அறிவித்திருந்தார்.

எனினும் மிருகபலி பூஜை இவ்வாண்டு நடைபெற மாட்டாது என அவர் தற்போது தெரிவித்துள்ளார்.

இப்பூஜைகளிற்கு எதிரான குரல்கள் தொடர்ந்தும் எழுந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# வாழ்வகம்

## (விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்)

## பதவி வெற்றிடம்

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் இயங்கிவரும் வாழ்வக நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு, நற்பண்பும் சேவை உள்ளமும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. எழுதுநர்:**

க.பொ.த. உயர்தரம் வர்த்தகத் துறையில் பயின்றிருப்பின் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களிலேனும் சித்தி பெற்றிருக்க வேண்டும். ஏனைய துறைகளில் பயின்றிருப்பின் க.பொ.த. சாதாரண தரத்தில் வர்த்தகமும் கணக்கியலும் பயின்றிருப்பதுடன், உயர்தர வகுப்பில் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். வாழ்வக இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற முன்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**2. விடுதி மேற்பார்வையாளர்:**

முப்பது வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சுய விபரங்களுடனான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 27.09.2012 இற்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர், வாழ்வகம்.**


# யாழ்.ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணை கடற்கரைப் பரப்பிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் ஊர்காவற்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதியினால் மரண பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை மீட்கப்பட்ட இச் சடத்தின் பிரேத பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஏற்கனவே வேலணை கடற்கரையில் கரையொதுங்கிய உருக்குலைந்த சடலம் ஒன்று தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் மற்றுமொரு சடலம் நேற்றுமுன்தினம் கரையொதுங்கி உள்ளமை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய இராசி பலன் (18.09.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 2ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : சித்திரை பின்னிரவு 1.03 வரை அதன் பின் சுவாதி
**திதி** : திருதியை பின்னிரவு 3.09 வரை.. அதன் பின் சதுர்த்தி
**சுபநேரம்** : 10.33 - 12.03
**இராகுகாலம்** : 3.03 - 4.33
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : சிறுலாபம், தடுமாற்றம், கொடுக்கல் வாங்கல் பிரச்சினை
**இடபம்** : நற்காரிய செய்கை, பொருள் இலாபம், இளையோர் உதவி
**மிதுனம்** : தேக ஆரோக்கியம், சுக அனுபவம், பிரயாணம்
**கடகம்** : காரிய தாமதம், அயலவர் தொல்லை, முற்கோபம்
**சிங்கம்** : வாக்குமேன்மை, எண்ணியது நிறைவேறும், பெரியோர் தரிசனம்
**கன்னி** : அமைதியின்மை, கஷ்ட ஜீவனம், கபால ரோகம்
**துலாம்** : பொருட்சேதம், தூக்கமின்மை, அமைதி குறைவு
**விருச்சிகம்** : தொழில் முன்னேற்றம், சுபசெலவு, எதிர்பாராத வரவு
**தனுசு** : காரியத்தடை, இலாபமின்மை, தொழிலாளர் பிரச்சினை
**மகரம்** : புதியன பெறுதல், தலயாத்திரை, மாமன்வழி உதவி
**கும்பம்** : கடன்படல், வயிற்று ரோகம், அந்நியர் தொல்லை
**மீனம்** : விருந்துபசாரம், உல்லாசப் பயணம், பெண்களால் நன்மை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# 22, 23ஆம் திகதிகளில் ஆசிரியர் தினப் போட்டிகள்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயத்தில் உலக ஆசிரியா தினத்தையொட்டி ஆசிரியர்களிடையே நடாத்தப்படவுள்ள போட்டிகளில் எதிர்வரும் 22ஆம் திகதி காலை ஒன்பது மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கற்பித்தல் துணைத்தளங்கள் தயாரித்தல், மாதிரி வகுப்பை நடாத்துதல் மற்றும் முறையான பாட முன் ஆயத்தம் குறிப்பொன்றை முன்வைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஆசிரியர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் ஆண்களுக்கான கரப்பந்து மற்றும் துடுப்பாட்டப் போட்டிகளும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் மற்றும் எறிபந்து ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

# வன இலாகா அதிகாரிகள் வேடுவர் மோதல்

வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் தம்பண்ணை வேடுவர் சிலருக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை மோதல் ஒன்று இடம்பெற்றது. புஞ்சிபண்டா என்ற ஒரு வேடுவரிடம் லைசன்ஸ் இல்லாத துப்பாக்கி ஒன்று இருப்பதை அறிந்த வன இலாகா அதிகாரிகள் அதனைக் கைப்பற்றுவதற்காக வேடுவர்களின் பகுதிக்குச் சென்ற போதே இந்த மோதல் இடம்பெற்றது. இரு வன இலாகா அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட வேடுவரும் காயமடைந்தனர். இரவு 11.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வேடுவரின் தாக்குதலுக்கு இலக்கான வன இலாகா அதிகாரிகளும், சந்தேக நபரும் மகியங்கனை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

துப்பாக்கியை வேடுவர் தலைவர் வன்னியாலோ அத்தோ பொலிஸாரிடம் கையளித்தார். பொலிஸார் புஞ்சி பண்டாவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

# பதினாறு பாடசாலைக்கு புவியியல் தேசப்படத் தொகுதிகள்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயப் பிரிவில் உள்ள 16 பாடசாலைகளுக்கு புவியியல் தேசப்படத் தொகுதி வழங்கப்பட்டுள்ளன. இவ் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 16 1AB தரப் பாடசாலைகளுக்கே இவ் புவியியல் தேசப்படத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, இளவாலை கன்னியார்மட மகா வித்தியாலயம், புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இநதுக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, நடேஸ்வரா கல்லூரி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மற்றும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே இவ் புவியியல் தேசப்படத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

# அரியாலையில் கல்யாண மண்டபம்

உடுவில்

அரியாலை பிரப்பங்குளம் மகா மாரி அம்மன் கோவில் சூழலில் கல்யாண மண்டபம் அமைக்கப்படவுள்ளது. பிரப்பங்குளம் மகா மாரி அம்மன் கோயில் கல்யாண மண்டபம் அமைப்பதற்கான ஆரம்ப கட்டப் பணியினை மேற்கொள்ளப் பரிபாலன சபையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

# கலாநிதி நிர்மல் ரஞ்சித்துக்கு மரண அச்சுறுத்தல்

பல்கலைக்கழக போதனாசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித்துக்கு மற்றும் ஓர் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் அளவில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கலாநிதி தேவசிறி கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அநுராதபுரத்திலுள்ள தனியார் தொலைபேசி நிலையம் ஒன்றில் இருந்து இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# மாற்று வலுவுள்ளோர் தினப் போட்டிகள்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வள நிலையத்தின் ஏற்பாட்டில் மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தையொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வலிகாமம் பிரிவிலுள்ள மாற்று ஆற்றலுள்ள மாணவர்களின் திறமைகளினை வெளிக்கொண்டு வருவதற்கும் அவர்களுக்கு நல்ல மகிழ்ச்சிகரமான சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் முகமாகவும் போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளன.

# கூடங்குளம் அணு மின்நிலைய ஆபத்து பற்றி நீதிமன்றம் பரிசீலிக்கும்

தமிழ்நாட்டில் கூடங்குளம் அணு மின் சக்தி நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புவதை நிறுத்தக் கோரி இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ரத்துச் செய்வதற்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இருந்தாலும் இந்தத் திட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை பரிசீலிப்பதற்கு நீதிமன்றம் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இந்த முதலாவது பிரிவு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று அணு சக்தி கட்டுப்பாட்டுச் சபை மும்பை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் நூற்றுக்கணககான அணுசக்தி எதிர்ப்பாளர்கள் இரண்டாவது நாளாக கடந்த வெள்ளிக்கிழமை கடலில் மனித சங்கிலிப் போராட்டம் நடாத்தினார்கள். அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கான முன் தயாரிப்பு வேலைகளை நிறுத்தக்கோரி ஆண்களும் பெண்களும் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தினை நடாத்தினார்கள். இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை என்ற ரீதியில் சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் நடாத்தப்பட்டது.

அணு மின்சக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பே இந்தப் போராட்டத்தை முன்கொண்டு செல்கிறது.

கடந்த வியாழக்கிழமை நீதியரசர்கள் கே.எஸ்.இராதாகிருஷ்ணன், டி.பா.மிஸ்ரா ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. "மக்களின் பாதுகாப்பே மிக முக்கியமானது. இந்த அணுமின் நிலையம் இருக்கும் பகுதியில் ஏழை மக்களே வாழ்கின்றார்கள்" தங்களின் வாழ்க்கை பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்த மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று நீதியரசர்கள் தெரிவித்தனர். இந்த வழக்கு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திக திக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# கணித பாட ஆசிரியர்களின் விபரத் திரட்டு

உடுவில்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் விபரம் திரட்டப்பட்டு வருகின்றன. இப்பாடசாலைகளிலுள்ள கணித பாட ஆசிரியர்களின் தரம் மற்றும் அவர்களின் பயிற்சி தொடர்பான விபரங்கள் என்பனவே திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# கழுகுக் கண்கள்

பல்கலைக்கழகத்தில் இந்தக் கழுகுக் கண்கள் மாணவனாக இருந்த போது நிகழ்ந்த சம்பவங்கள் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

ஒரு மனிதனின் அறிவு முதிர்ச்சிக்கும் அவன் வாழ்நாள் பூராவும் நற்பண்புகளை கடைப்பிடிப்பதற்கும் பல்கலைக்கழகங்கள் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குகின்றன. பல்கலைக்கழகங்களில் பண்டைய குருகுல நற்பண்புகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆசிரியர்களை மதித்தல், பல்கலைக்கழகங்களுக்குள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றுடன் நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் இரண்டு மணித்தியாலங்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் மூன்று மணித்தியாலங்கள் நூலகங்களிலும் நேரத்தை செலவிட வேண்டும் என்ற கண்டிப்பு பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் 40ஆம் ஆண்டு தசாப்தத்திலும் 50ஆம் ஆண்டு தசாப்தத்திலும் இந்த நற்பண்புகள் எங்கள் நாட்டின் அன்றிருந்த பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கடைப்பிடிக்கப்பட்டன. இதனால்தான் வெளிநாடுகளில் அன்று எமது பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு உடனடியாக பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர், பேராசியர் பதவிகளும், டாக்டர்கள், பொறியியலாளர், கணக்காளர் மற்றும் சட்டத்தரணி பதவிகளும் எவ்வித காலதாமதமும் இன்றி உடனடியாக கிடைத்தன.

அது மட்டுமன்றி எமது நாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறுபவர்களின் கல்வித்தரம் அதி உயர் நிலையில் இருந்ததனால் இங்கிலாந்தின் ஒக்ஸ்பேட், கேம்பிரிஜ் பல்கலைக்கழகங்களும் பிரான்ஸின் சோபோன் பல்கலைக்கழகமும் கலாநிதி பட்டத்திற்கான மேற்படிப்பை தொடர்வதற்கு எவ்வித கண்டிப்பும் இன்றி புலமைப்பரிசில்களையும் வழங்கியது.

இன்று எங்கள் நாட்டு பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளுக்கு பணம் கொடுத்து கலாநிதி பட்டம் பெறுவதற்கு கூட வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் தயக்கம் காட்டுகின்றன. அதற்கு காரணம் இன்று எமது பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் மிகவும் மோசமான நிலையை அடைந்திருப்பதேயாகும்.

இவ்விதம் தழைத்தோங்கியிருந்த எங்கள் நாட்டு பல்கலைக்கழகங்களின் கல்வி நிலை இன்று வீழ்ச்சியடைந்திருப்பதற்கு பிரதான காரணம் மாணவர் சங்கங்கள் என்ற பெயரில் மாணவர் அமைப்புகள் பல்கலைக்கழகத்தின் வேந்தர், உபவேந்தர் மற்றும் பீடாதிபதிகளின் அதிகாரங்களை பறித்து, அவர்களை தலையாட்டும் பொம்மைகளாக செயற்படுவதற்கு சில மாணவர் அமைப்புகளின் ஊடாக ஜே.வி.பி. மற்றும் எல்.ரி.ரி.ஈ. போன்ற அமைப்புகள் வெற்றிகரமான முறையில் சதித்திட்டங்களை நிறைவேற்றியதேயாகும். பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், உபவேந்தர் ஆகியோரின் அதிகாரம்பறிபோனதால் மாணவர் அமைப்புகள் அவ்வதிகாரத்தை தங்கள் கையில் வைத்துக் கொண்டு பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தை சீர்குலைக்கச் செய்தன.

இவ்விதம் சீர்குலைந்து போன பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தையும் கல்வித்தரத்தையும் உயர்த்துவதற்கு முதலில் பல்கலைக்கழகங்களில் ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்று உயர்கல்வி அமைச்சு எடுத்த முயற்சிகளையும் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் முறியடித்தன.

பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் ஒரு மாணவன் பல்கலைக் கழகத்திற்குள் ஆங்கிலம் பேசுவதற்கு இன்று தடை விதித்திருப்பதுடன் மாணவர் ஒருவர் பேராசிரியரை சந்திக்க விரும்பினால் மாணவர் அமைப்பின் பிரதிநிதியுடன் சென்றுதான் அவரை சந்திக்க முடியும் என்ற கட்டுப்பாடும் விதித்துள்ளன.

அதனால்தான் இன்று பல்கலைக்கழக கல்வி கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய நிலைக்கு வந்துள்ளது. இன்றைய அவல நிலையை போக்க வேண்டுமாயின் முதலில் எமது பல்கலைக்கழகங்களில் மாணவர்களை தூண்டி வன்முறைகளில் ஈடுபட வைக்கும் ஜே.வி.பி. போன்ற அரசியல் அமைப்புகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுத்து, பல்கலைக்கழகங்களில் அரசியல் செய்யும் மாணவர்களை தயவு தாட்சண்யம் இன்றி கடுமையாக தண்டிக்க வேண்டும். அவசியமாயின் அவர்களை ஓரிரு ஆண்டுகளுக்கு பல்கலைக்கழக கல்வியை தொடர முடியாத நிலையையும் ஏற்படுத்தலாம். கடுமையான குற்றச் செயல்களில் ஈடுபடும் மாணவர்களை பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்தில் இருந்து முழுமையாக நீக்கிவிடவும் வேண்டும்.

அதே போன்று பல்கலைக்கழக ஆசிரியர், பேராசிரியர்களை வெளியில் உள்ள அரசியல் சக்திகள் தங்கள் விருப்பப்படி வழிநடத்தும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.


இலங்கை மாணவர்களும் இப்போது மலேசியா, சிங்கப்பூர், பூட்டான், நேபாளம் போன்ற பல்கலைக்கழகங்களுக்கு சென்று கல்வி கற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை போக்குவதற்கு அரசாங்கம் வெளிநாட்டு. பல்கலைக்கழகங்களை இலங்கையில் செயற்படுவதற்கு அனுமதி வழங்குவதை சுயநல நோக்கத்துடன் எமது நாட்டு பல்கலைக்கழக மாணவர்களும், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் எதிர்க்கிறார்கள்.

இதனை அடைய வேண்டுமானால் ஜே.வி.பி. போன்ற பல்கலைக்கழக கல்வியை சீர்குலைக்கும் அரசியல் அமைப்புகளின் கொட்டம் அடக்கப்பட வேண்டும்.

இதற்காக இந்தக் கழுகுக் கண்கள் வாழ்நாள் பூராவும் தொடர்ந்தும் போராட்டத்தை நடத்தும் என்று உறுதியளிக்கின்றேன்.

# கிழக்கு முதல்வர் பதவி:
# முஸ்லிம் கட்சிகளிடையே போட்டி தொடர்கிறது





கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை கைப்பற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள முஸ்லிம் கட்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இடையிலான போட்டி தீவிரமடைந்துள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸும் மாகாண சபைகள், உள் ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும், அமீர் அலியை முதலமைச்சராக்க வேண்டுமென கோருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் உறுப்பினரான அமீர் அலி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்ட மைப்பில் போட்டியிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை தனது கட்சியின் தூதுக்குழுவொன்று சந்தித்து முதலமைச்சர் பதவியை கோரியதாக அகில இலங்கை மக்கள் காங் கிரஸின் தேசிய அமைப்பாளரான பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கூறினார்.

“அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும் இதுதொடர்பாக எம்முடன் புரிந்துணர்வுக்கு வந்துள்ளது. நாம் கோரிக்கையை முன்வைத்தோம். இதுதொடர்பாக இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை“ என பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கூறினார்

# நிபந்தனைகளை ஏற்றால் சர்வகட்சி ஆட்சிக்குத் தயார்

## ஐ.தே.க. சொல்கிறது


கிழக்கு மாகாண சபையில் அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து சர்வகட்சி ஆட்சியமைக்க ஐ.தே.க. தயாராகவே உள்ளது.

ஆனால் எமது நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அக் கட்சியின் பிரதிச் செயலாளரும் எம்.பி.யுமான டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி. இதனைத் தெரிவித்தார்

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்குவதற்காகவே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

எனவே அதனை நடைமுறைப்படுத்துவதற்காக ஐ.தே.கட்சி தயாராகவே உள்ளது. இதனடிப்படையில் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்காக அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராகவே உள்ளோம்.



ஆனால் நாம் முன் வைக்கும் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்தோடு அதற்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும்.

சர்வகட்சி ஆட்சியமைக்க முன்வருமாறு அமைச்சர் டியூ குணசேகர அழைப்பு விடுத்துள்ளார். இது அவரது தனிப்பட்ட அழைப்பா அல்லது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பின்னணியிலான அழைப்பா என்பது தெரியாது.

எது எப்படியானாலும் எமது நிபந்தனைகளான வடக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் எப்போது நடத்தப்படும் என்பது தொடர்பில் காலம், திகதி அறிவிக்கப்பட வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் அத்தோடு அதற்கான கால எல்லை நிர்ணயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பாக இணக்கப்பாட்டு நிகழ்ச்சி நிரல், அதற்கான கால ?ல்லை என்பன தெரியப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு இரண்டு வருடங்கள் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் ஒருவருக்கும் இரண்டு வருடங்கள் முதலமைச்சர் பதவியை தமிழரொருவருக்கும் ஒரு வருடம் முதலமைச்சர் பதவியை சிங்களவரொருவருக்கும் வ்ழங்க வேண்டும். இவைகள் தான் எமது நிபந்தனைகள் இவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு சர்வகட்சி ஆட்சி தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்தால் ஐ.தே.க. கட்சி அதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடத்தயார் என்றார்.

# “மேஜரை நான் தாக்கவில்லை”



## ‘கீழே கிடந்த துப்பாக்கியை எடுத்து எனது சாரதியே பொலிஸில் கொடுத்தார்’

செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி இராணுவ மேஜரொருவரை தாக்கி அவரது கைத்துப்பாக்கியை பறித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா மறுத்துள்ளார்.

“ஹோட்டலில் நைட் கிளப்பில் ஏற்பட்ட குழப்பத்தின்போது யாரோ சிலர் இராணுவ மேஜரை தாக்கினர். அத்தருணத்தில் அவரது கைத்துப்பாக்கி கீழே விழுந்துள்ளது. எனது வாகன சாரதி இக் கைத்துப்பாக்கியை எடுத்து பொலிஸில் ஒப்படைத்தார்” என அவர் கூறினார்.

அன்றையதினம் கொழும்பிலுள்ள ஹில்டன் வீட்டுத்தொகுதியில் தனது நண்பர்களுடன் தேர்தல் முடிவுகளை தான் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

“நான் தேர்தல் முடிவுகளை தொலைக்காட்சியில் பார்த்த பின்னர் வீட்டிற்குப் போக தயாரானபோது

2 பேரை அவதானித்தேன். இவர்களில் ஒருவரை வெளிநாட்டுப் பயணங்களின்போது பல தடவைகள் நான் சந்தித்துள்ளேன். நாவல நிஹால் என்னும் இவர் “பொடி சூட்டி“ என அழைக்கப்படுபவராவர். நான் அவருக்கு ஹலோ சொன்னேன். பின் வந்த மற்றைய நபர் இவன் யாரென அவர்களிடம் கேட்டார்.

என் னைப் பற்றி அவன், இவனெனப் பேசுவதற்கு நீ யாரென நான் கேட்டேன்” என அவர் கூறினார்.

இவ்வாறான வாய்த்தர்க்கத்தை விட வேறு சம்பவங்கள் இடம்பெறவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

இராணுவ அதி காரி ஒருவரை தாக்கியதாகக் கூறப் படும் அமைச்சர் மேர்வின் சில்வா வின் புதல்வர் மாலக்க சில்வா, ரேஹான் விஜயரட்ன மற்றும் ஏனையோரும் கொம்பனித்தெரு பொலிஸில் சரணடைந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# மட்டக்களப்பில் கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, பூம்புகார் வாவிக் கரைப் பகுதியில் உள்ள பழைய மாடு அறுக்கும் மடுவத்துக்கு அருகில் இருந்து மூன்று கைக்குண்டுகளை மட்டக்களப்பு பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை பையொன்றினுள் சுற்றப்பட்ட நிலையில் இருப்பதை அப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கண்டு, அவர்கள் வழங்கிய தகவலையடுத்து இக் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இக் குண்டுகள், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாக, இவ்விடயம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரு வதாகவும் மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

# துப்பாக்கி வெடித்ததில் அறுவர் காயம்

பசறையிலுள்ள மக்கள் வங்கியொன்றில் நேற்று திங்கட்கிழமை கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழி யொருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பசறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுக்காலை வங்கி நடவடிக்கைகள் ஆரம்பமான வேளை அங்கு பணியில் இருந்த பாதுகாப்பு ஊழியர் கையில் வைத்திருந்த துப்பாக்கி எதிர்பாராத விதமாக வெடித்ததிலேயே இந்த அனர்தம் நிகழ்ந்துள்ளது.

# தங்கபிஸ்கட்டுகளைக் கடத்தியவர் விமான நிலையத்தில் கைது

தங்கபிஸ்கட்டுகளைக் கடத்த முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மும்பைக்குச் செல்லவிருந்த கொழும்புப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 15 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு குறித்த நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கபட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இம் மாதத்தில் மாத்திரம் தங்கத்தை வெளிநாடுகளுக்குக் கடத்த முற்பட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் இருந்து இந்தியாவுக்கும் இந்தியாவில் இருந்து இந்தியாவுக்கும் இடையே தங்கம் கடத்தும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதாக இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே தெரிவித்திருந்ததோடு கடத்தல் காரர்களை மடக்கிப் பிடிக்க விமான நிலையத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய மனித உரிமை ஆணையாளர் இலங்கை விஜயம்

## முக்கிய சந்திப்புக்களிலும் ஈடுபடுவார்

ரஷ்ய மனித உரிமை ஆணையாளர் கொன்ஸ்தாந்தின் தொல்கோவ், இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 18,19ம் திகதிகளில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் விசேட அழைப்பை ஏற்றுக் கொண்டு, தொல்கோவ் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

வெளிவிகார அமைச்சர் உள்ளிட்ட ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அண்மைக்காலமாக இலங்கைக்கு வெளிநாட்டுப் பிரதிநிகள் விஜயம் செய்வது அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பாக ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் சமகால நிலவரங்கள் குறித்து ஆர்வம் காட்டிவருகின்றனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## கச்சதீவுக்காக மீண்டும் வரிந்துகட்டுகிறார் ஜெயலலிதா

கச்சதீவை மீளப் பெறுவதற்கு இந்திய மத்திய அரசு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா அண்மையில் வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பான தீர்மானமொன்றும் சில மாதங்களுக்கு முன்னர் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. தமிழக சட்டசபையின் ஆளும் கட்சியாக முதல்வர் ஜெயலலிதாவின் கட்சியே இருப்பதால், இத் தீர்மானத்தை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. அதுமட்டுமல்ல, தமிழ் நாட்டின் ஆளும் கட்சியாக இருந்தாலென்ன, எதிர்க்கட்சியாக இருந்தாலென்ன தமது இருப்புக்காக இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினையை பாவித்துக் கொள்வது வழக்கம். தமது ஏட்டிக்குப் போட்டியான அரசியல் காய் நகர்த்தலுக்காக இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினையை கையில் எடுப்பதும் வழக்கம்.

கச்சதீவு, இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. 1974ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் மூலம் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமாகக் கையளிக்கப்பட்டது. இது இரண்டு அயல் நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். இந்த ஒப்பந்த விதிமுறைகளின்படி இந்திய மீனவர்கள் கச்சதீவில் தமது மீன்பிடி வலைகளை காயப்போட முடியும். மனிதர்கள் வாழாத ஒரு சூனியப் பகுதியே கச்சதீவாகும். இங்கிருக்கும் புனித அந்தோனியார் தேவாலயத்தில் வருடா வருடம் நடக்கும் திருவிழாவின்போது இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் மக்கள் கச்சதீவுக்குச் செல்வது வழக்கம்.

ஒரு வர்த்தக மையமாகக் கூட கச்சதீவு திருவிழாக் காலங்களில் செயற்படுவதுண்டு. நெடுந்தீவுக்கு அண்மித்ததாக கச்சதீவு அமைந்துள்ளது. வடக்கிலிருந்து நெடுந்தீவிற்கூடாக கச்சதீவிற்கு திருவிழாக் காலத்தில் இலங்கையர்கள் பொருட்களைக் கொண்டு செல்வதுண்டு. இதேபோன்று இந்தியர்களும் கம்பளிகள், சேலைகள் போன்ற பொருட்களைக் கொண்டு வந்து பண்டமாற்று செய்வார்கள். வட பகுதியில் இருந்து செல்பவர்கள் கூட நல்லெண்ணெய் போன்ற பொருட்களை எடுத்துச் செல்வார்கள். அதற்காகத் தேவாலய தரிசனத்திற்கு மக்கள் செல்வதில்லை என்று கூற முடியாது. தென்னிலங்கைச் சிங்கள கத்தோலிக்க மக்களும் கூட திருவிழாக் காலத்தில் கச்சதீவிற்கு வந்து செல்வதுண்டு. நெடுந்தீவு பங்குக் குருவானவரே திருவிழாக் காலத்தில் திருப்பலி ஒப்புக் கொடுப்பதுண்டு.

கச்சதீவுப் பிரச்சினையால் தமிழக மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவதாக ஜெயலலிதா கூப்பாடு போடுகிறார். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றும் ஜெயலலிதா அப்பட்டமான பொய்களைக் கூறிவருகிறார். கடந்த 14ஆம் திகதி கச்சதீவை மீளப் பெறுவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கூட்டம் கூட்டியதாக ஜெயலலிதா கூறியுள்ளார். 2008ஆம் ஆண்டே கச்சதீவை மீளப் பெறுவதற்காக அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் என்ற வகையில் ஜெயலலிதா இந்திய சுப்ரீம் கோர்ட்டில் மனுவொன்றினைத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது. இப்போது இந்த வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கோரி தமிழக அரசின் சார்பில் மனுவொன்றைத் தாக்கல் செய்ய ஜெயலலிதா முயன்றுள்ளார். ஆக, கச்சதீவை இலங்கைக்கு கையளித்த ஒப்பந்தம் செல்லுபடியாகாதென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென்றே தமிழக முதல்வர் கோரியுள்ளார்.

கச்சதீவு சம்பந்தமான ஒப்பந்தம் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்டது. தமிழக அரசிடம் ஆலோசனை எதுவும் கேட்காமலேயே இந்திய மத்திய அரசு இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. ஜெயலலிதா கோருவதைப் போல கச்சதீவை திரும்பப் பெற வேண்டுமானால் இந்திய மத்திய அரசும் இலங்கை அரசாங்கமும் பேசித்தான் தீர்க்க வேண்டும். இதுவொன்றும் ஜெயலலிதாவுக்கு தெரியாததல்ல.

கச்சதீவு விவகாரத்தில் இந்தியா எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லையென்று ஏற்கனவே பொறுப்பு வாய்ந்த மத்திய அமைச்சர்கள் கூறிவிட்டார்கள். இதைப்போன்று இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்தோ சர்வதேசக் கடல் எல்லைக்குள் வைத்தோ இலங்கைக் கடற்படையினர் தாக்குவதில்லையென்றும் பொறுப்புவாய்ந்த இந்திய மத்திய அரசின் அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள்.

உலகில் எட்டுக் கோடி தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் ஆறரைக் கோடி தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள். வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையெங்கும் வாழும் தமிழ் மக்களின் எண்ணிக்கை சுமார் ஐம்பது இலட்சம் கூடத் தேறாது. இந்த நிலையில் தமது சொந்த அரசியல் இருப்பிற்காக இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் இடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கக்கூடாது. கச்சதீவு விவகாரம் என்றோ முடிந்துவிட்டது. ஜெயலலிதா கத்திக் குளறுவதால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

## மார்க்சிய தத்துவம் ஒரு பார்வை

பன்னெடுங்காலமாகச் சமூகம் விருத்தியுற்றுக் கொண்டே வருகின்றது. பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் மூலம் டார்வின் எவ்வாறு மனிதன் உருவாகினான் என்பதை உலகிற்கு எடுத்துரைத்தான். ஆனால் மனித சமூகம் தனது விருத்திப் பாதையில் எவ்வாறு பயணித்துக் கொண்டேயிருக்கிறது என்பதை எடுத்துரைத்ததின் மூலம் கார்ல் மார்க்ஸ் தமது புகழை மேலோங்கச் செய்து விட்டார். சமூகத்தின் வளர்ச்சியில் வர்க்கப் போராட்டம் வகிக்கும் பங்கினைக் கார்ல் மார்க்ஸ் உலகிற்கு எடுத்துரைத்தார். கார்ல் மார்க்ஸ் 1818ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி ஜேர்மனியில் பிறந்தார். இவர் 1800ல் பிறந்த பேரறிஞர்களில் முதன்மையானவராகக் கருதப்படுகின்றார். அவரது சமூக விஞ்ஞான ஆராய்ச்சிகள் அவரது புகழை மேலோங்கச் செய்திற்று.

அவர் பன்மொழி வல்லுனர். இயற்கை விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் பேராற்றல் கொண்டு விளங்கியவர். மார்க்ஸின் தந்தையார் ஒரு சட்ட வல்லுனர். ஆற்றலும், ஆராயும் மனப்போக்குமுடைய கார்ல் மார்க்ஸ் சமூகத்தின் முரண்பாடுகளை ஆராய்வதிலும், அதனது அடிப்படையான காரணங்களைக் கண்டறிவதிலும் தமது முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

சமூகம் ஆதியில் வர்க்க முரண்பாடற்ற சமூகமாக விளங்கிற்று என்பதை கார்ல் மார்க்ஸ் நிறுவினார். பின்னர் சமூகம் ஆண்டான் அடிமைச் சமூகமாகவும், நிலவுடைமைச் சமூகமாகவும், முதலாளித்துவ சமூகமாகவும் விருத்தியுற்றமைக்கு வர்க்க முரண்பாடும் அதனால் எழுந்த போராட்டங்களுமே காரணங்களென நிறுவினார். இதனை ஆரம்பத்தில் எதிர்த்த சிலரை தமது நியாயபூர்வமான, தர்க்க ரீதியான எடுத்துரைப்புக்களினால் அவர் வெற்றி கொண்டார். இயங்கியல் பொருள்முதல்வாதம் மனிதனின் வளர்ச்சியில் அளித்த பங்கினை கார்ல் மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். அவரது தத்துவ ரீதியான விளக்கங்களுக்கு எவரும் பதிலிறுக்க முடியாது போயிற்று. சமூகம் மாறிக் கொண்டும், வளர்ச்சியுற்றுக் கொண்டும் இருக்கிறது என்பதை கார்ல் மார்க்ஸ் நிறுவினார்.

கார்ல் மார்க்ஸ் நிறுவிய தத்துவத்தினை மார்க்கிசம் என மக்கள் அழைப்பர். இத் தத்துவம் மாறுதலை ஏற்றுக் கொள்கிறது. அதனது அடிப்படையான கருத்து எல்லாப் பொருட்களும் எண்ணங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன



என்பதாகும். புராதன கால கட்டத்தில் மனிதனது உணர்வு இயற்கை பற்றியதாகவும் இயற்கை சார்ந்ததாகவும் விளங்கிற்று. மனிதன் வெல்ல முடியாத சக்தியாக இயற்கையைப் பார்த்தான். காலப்போக்கில் அதனைத் தனது தேவைக்கேற்ப படிப்படியாக மாற்றக் கற்றுக் கொண்டான்.

சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகளினால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளை அடியோடு தவிர்க்க முடியாது என்பதைக் கார்ல் மார்க்ஸ் நிறுவினார். இதனை நாம் எக்காலத்திலும் விஞ்ஞான ரீதியாக சமூக நிகழ்வுகளைப் பகுத்தாராயும்போது கண்டு கொள்ளலாம். சமூக அமைப்புக்களே உள்ள முரண்பாடுகளே சமூகத்தின் மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் வித்திடுகின்றன என்பதையும் கார்ல் மார்க்ஸ் நிறுவினார். ஒரு நிகழ்ச்சியில் ஒன்றுக்கொன்று எதிர் நிற்கும் அம்சங்களை, சக்திகளை, போக்குகளை அவதானிக்கலாம். அவை ஒன்றையொன்று மறுக்கின்றன விலக்குகின்றன. அதே சமயம் ஒன்றுக்கு ஒன்று காரணம் ஆகின்றன. முரண்பாடு எதிர்நிலைகளின் பரஸ்பர உறவைக் குறிக்கிறது. இந் நிலையை விஞ்ஞான ரீதியாக ஆராயும்போது இயற்கை விஞ்ஞானத்திலும், சமூக விஞ்ஞானத்திலும், சமூக விஞ்ஞானத்திலும் இதனை அவதானிக்கலாம் என்பதை கார்ல் மார்க்ஸ் தெளிவாக உலகிற்கு எடுத்துரைத்தார்.

மனிதனது மனதில் தோன்றும் எண்ணங்கள் யாவும் சமூக அடித்தளத்தின் பிரதிபலிப்பாகும். கார்ல் மார்க்ஸ் சமூகவியல் அடிப்படையில் எதையும் காணும் தன்மைக்கு முக்கியத்துவம் அளித்தார். அதாவது 'அடிப்படை - மேற்கோப்பு' கோட்பாட்டின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார். 'சமூக இருப்பு' சமூக உணர்வினைத் தீர்மானிக்கும் என்று மார்க்ஸ் கூறினார். கருத்தாக்கம், சிந்தித்தல், மனிதர்களுக்கிடையே உள்ள எண்ண உறவுகள் ஆகியன அவர்களது உலகியல் நடவடிக்கைகளின் வெளிப்பாடாகத் தோன்றுகின்றன. மார்க்ஸிசத்தின் முக்கியமான கருத்துக்களில் ஒன்று அந்நியமாதல் என்பதாகும். உழைப்பாளிக்கு அவன் உற்பத்தி செய்த பொருள் உரியதல்ல. உழைப்பாளி அவனது உழைப்பின் பலனிலிருந்து விடுபட்டு விடுகிறான். அவன் அந்நியமாகிறான் என்பதை வாழ்வில் உணரக்கூடியதான நிலைமையை இன்றும் நாம் காண்கிறோம்.

– நா. பாலசிங்கம்

## மனித நாகரிகமும் மண்புழு நாகரிகமும்

சீரியலுக்கும், சினிமாவிற்கும், சந்தை இலக்கியத்திற்கும் எதிரானவர்களாக தங்களைச் சித்திரித்துக்கொள்கிறார்கள், சிற்றிலக்கியவாதிகள். இவர்கள் இலக்கியத்தில் தேடும் புதுமைக்கும், ஜீன்ஸ் போட்ட சேட்டுப் பெண்கள் ஸ்பென்சர் பிளாசா செருப்புக் கடையில் தேடும் புதுமைக்கும் சாரத்தில் வேறுபாடு இல்லை. இலக்கிய மேட்டிமையின் நுகர்வுப் பசியும், மேட்டுக் குடியின் நுகர்வு வெறியும் தோற்றுவிக்கும் படைப்பு கழிவு.

கம்யூனிசத்தின் தோல்வியை மிகக் குதூகலமாகக் கொண்டாடும் முதலாளித்துவ எழுத்தாளர்கள் கூட ரசியாவிலும் சீனாவிலும் மக்களுக்கு உணவு, உடை, வீடு, சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை என்றோ, அதனால்தான் மக்கள் சோசலிசத்தைக் கைகழுவி விட்டார்கள் என்றோ கூறுவதில்லை.

"வெறும் அடிப்படைத் தேவைகளைக் கொண்டு மட்டும் திருப்தியடைவதற்கு மனிதன் என்ன மிருகமா? அமெரிக்கா, ஐரோப்பாவைப் பாருங்கள்...! விதவிதமான உணவு வகைகள், அன்றாடம் மாறும் ரசனைக்கேற்ற உடைகள், புதுப்புது வடிவிலான கட்டிடங்கள், திரைப்படங்கள், கேளிக்கைகள், மதுபானங்கள், குளிர்பானங்கள், விதவிதமான நுகர் பொருட்கள்... என்று வாழ்க்கைத்தரம் பெரிதும் "முன்னேறி" விட்டது. ரசியா, சீனாவில் இத்தகைய "முன்னேற்றம்" இல்லை."

"மனிதனின் விதவிதமான தேவைகளை எல்லாம் நிறைவு செய்கின்ற, அங்கீகரிக்கின்ற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைப் பற்றி சீன, ரசிய மக்களுக்கு எதுவும் தெரியாது. அது அவர்களுக்குத் தெரியவரும் போது அங்கே சோசலிசம் தானே வீழ்ந்துவிடும்" என்பதுதான் முதலாளித்துவ எழுத்தாளர்களின் முக்கியமான பிரச்சாரமாக இருந்தது. இன்று சீனாவிலும் ரசியாவி லும் எங்கு திரும்பினாலும் பெப்சி, கோக், சோனி, மிட்சுபிசி, ஃபோர்டு, டொயோடா ஆகியவற் றுடன் புதிதாகக் கஞ்சித் தொட்டிகள், நடைபாதை வாசிகள், வேலையில்லாதவர்கள், விலைமாதர்கள், கொள்ளைக்காரர்கள், மஃபியா கும்பல்கள் ஆகியவையும் அமெரிக்காவைப் போன்றே உருவாகி விட்டன. இந்தத் தற்காலிக வெற்றியின் காரணமாகவே முதலாளித்துவம் நியாயமானதாகிவிட முடியாது ஒழுக்கமானதாகி விட முடியாது.

# சிறார், பெண்கள் துர்ப்பிரயோகம்: ஆறு வீதத்தால் அதிகரிப்பு

## - பொலிஸ் பேச்சாளர்



இலங்கையில் சிறார், பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் .6 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 750 மனித கொலைச் சம்பவங்கள் பதிவாகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். “திவயின” சிங்களப் பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த யுத்தச் சூழலில், நாட்டில் வருடாந்தம் சுமார் ஆயிரத்து 500 மனித படுகொலைச் சம்பவங்கள் பதிவானதாகவும், இதற்கமைய தற்போதைய புள்ளிவிபரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது குற்றச்செயல்களில் அதிகரிப்பு காணப்படவில்லை எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய சிந்தனை

**ஒரு அழகிய மனோரதத்தை,**
**ஒரு உன்னத இலட்சியத்தை**
**தங்கள் இதயத்தில் வைத்துப்போற்றுபவர்கள்**
**ஒருநாள் அதனை அடைந்தே தீருவர்**

கனவு காண்பவர்கள் உலகத்தின் இரட்சகர்கள்.
நம் கண்ணுக்குப் புலப்படக்கூடிய உலகம் கடவுளால் தொடர்ந்து நிலைபெற்றிருக்கச் செய்யப்படுவதைப் போலவே மனிதகுலமும் தன் சோதனைகளுக்கும் தவறுகளுக்கும் துன்பங்களுக்கும் இடையே தனியான கனவாளர்களின் அழகான மனோரதங்களால் போஷிக்கப்படுகிறது.

மனிதகுலம் தன் கனவாளர்களை மறந்துவிட முடியாது. அது அவர்களின் இலட்சியங்கள் மங்கி மறைந்துபோக விட்டுவிட முடியாது. அது அவைகளில் தான் வாழ்கிறது.

தான் ஒருநாள் கண்டறிந்து கொள்ளப்போகும் நனவுகளாக அது அவற்றை அறியும்.

இசைஞர், சிற்பி, ஓவியம், கவிஞர், தேவதூதர், ஞானி - இவர்கள்தான் விண்ணுலகை உருவாக்குபவர்கள், சொர்க்கலோகத்தின் கட்டுமானக் கலைஞர்கள்.

அவர்கள் வாழ்ந்திருப்பதால்தான் உலகம் அழகாக இருக்கிறது.

அவர்கள் இல்லாவிட்டால், கடும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதகுலம் அழிந்துபோகும்.

ஒரு அழகிய மனோரதத்தை, ஒரு உன்னத இலட்சியத்தை, தங்கள் இதயத்தில் வைத்துப் போற்றுபவர்கள் ஒருநாள் அதனை அடைவார்கள். கொலம்பஸ் பிறிதோர் உலகம் பற்றிய ஒரு மனோரதத்தை, சிந்தையில் வைத்துப் போற்றினார், அதனைக் கண்டு பிடித்தார்.

கோபர்நிகஸ் உலகங்களின் பல்லெண்ணிக்கை மற்றும் மேலும் விரிந்த பிரபஞ்சம் என்னும் மனோரதத்தை மனதில் பேணினார், அதனை வெளிப்படுத்தினார்.

புத்தபிரான் மாசற்ற அழகும் பூரண அமைதியும் கொண்ட ஒரு ஆன்மீக உலகைச் சிந்தையில் நோக்கினார். அதனுள் பிரவேசித்தார். உங்கள் மனோரதங்களைச் சிந்தையில் வைத்துப் போற்றுங்கள், உங்கள் இலட்சியங்களைச் சிந்தையில் வைத்துப் போற்றுங்கள், உங்கள் இதயத்தில் கிளரும் சங்கீதத்தை.

உங்கள் மனதில் உருவாகும். அழகை, உங்களின் மிகச் சிறந்த எண்ணங்களை அலங்கரிக்கும் வசீகரத்தை, சிந்தையில் கொண்டு போற்றுங்கள். ஏனெனில் அவற்றிலிருந்துதான் எல்லா மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகளும், எல்லா சொர்க்கச் சுற்றுப்புறமும் தோன்றுகின்றன.

இவைகளால் இவைகளுக்கு நீங்கள் உண்மையாக இருந்தால், உங்கள் உலகம் இறுதியில் நிர்மாணிக்கப்படும்.

# சத்தியசாயி நிலையத்தின் சாந்தி யாகம்

சண்டிலிப்பாய்

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழுவினரால் இம் மாதம் 25, 26, 27ஆம் திகதிகளில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை 7.15 முதல் சர்வ மதப் பிரார்த்தனையும் மஹாம்நந்யுஞ்ஜய சாந்தி யாகமும் நடைபெறவுள்ளது.

இலங்கை மக்கள் அனைவரது சாந்திக்காகவும் சுபீட்சமான வாழ்விற்காகவும் சோதிவேம்படி வீதி மானிப்பாயில் அமைந்துள்ள சத்தியசாயி பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் பிரார்த்தனையில் பல நூற்றுக்கணக்கான சாயி பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கணவனை இழந்த குடும்பங்களுக்குக் கொடுப்பனவு

சண்டிலிப்பாய்

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாக தெரிகின்றது.

மேற்படி திட்டத்தின் மூலம் வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்த கணவனை இழந்த குடும்பங்களில் அதிகளவான குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிற்கே இவ் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு தலா 1130 ரூபா வீதம் இவ் உணவுக் கொடுப்பனவு உரிய பகுதி பல நோக்கு கூட்டுறவு சங்கங்களூடாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# முதியோர் அடையாள அட்டை

சண்டிலிப்பாய

முதியவர் அடையாள அட்டைக்கு இதுவரை விண்ணப்பம் செய்யாதவர்கள் உடனடியாக தங்களது விண்ணப்பங்களை கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

சண்டி லிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 60 வயதை பூர்த்தி செய்த முதியவர்கள் உடனடியாக தங்கள் பகுதி கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாற கேட்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தில் இடம் பெறும் அடையாள அட்டைக்கான நடமாடும் சேவையில் இலவசமாக புகைப்படம் எடுக்க உள்ளதால் தனது விபரங்களை பதிவ தன் மூலம் இலவசமாக புகைப் படம் எடுக்க முடியும் என தெரி விக்கப்பட்டுள்ளது.

# சண்டிலிப்பாயில் அடையாள அட்டைக்காக நடமாடும் சேவை

சண்டிலிப்பாய்


அடையாள அட்டைகள் தேவைப் படுபவர்கள் உடனடியாக தம்து பகுதி கிராம அலுவலருடனோ அல் லது பட்டதாரிப் பயிலுநர்களுடனோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடமாடும் அடையாள அட்டை சேவையொன்றை நடாத்தப்பட உள்ளது. அடையாள அட்டையினைப் பெற விரும்புபவர்கள் கிராம அலுவலருடன் அல்லது பட்டதாரிப் பயிலுனர்களுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

இதுவரை அடையாள அட்டையினை பெறாதவர்கள் அடையாள அட்டை தொலைந்தவர்கள் அடையாள அட்டை சேதமடைந்தவர்கள், அடையாள அட்டையில் பெயர் மாற்றம் செய்ய விரும்புவர்கள் ஆகிய பல்வேறு தேவையுடையவர்களும் இந்த நடமாடும் சேவையுடன் தொடர்புகொள்ள முடியும்.

மேலும் அடையாள அட்டைக்கான புகைப்படங்கள், பொலிஸ் முறைப்பாடுகள் என்பன செயலகத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரபல நாவல் ஆசிரியர் சல்மான் ருஷ்டி தலைக்கு அதிக விலை!



பிரபல நாவல் ஆசிரியர் சல்மான் ருஷ்டியின் தலைக்கு கூடுதலாக 5 லட்சம் டாலர் பரிசுத் தொகையை ஈரானை சேர்ந்த இஸ்லாமிய அமைப்பு அறிவித்துள்ளது. உலக புகழ் பெற்ற ஆங்கில நாவல் ஆசிரியர் சல்மான் ருஷ்டி (65).

மும்பையில் பிறந் தவர். இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர். 1988-ல் இவர் எழுதிய “த சாத்தானிக் வெர்சஸ்“ என்ற நாவல் முஸ்லிம்களின் மத நம்பிக்கையை புண்படுத்தும் வகையில் இருப்பதாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. முஸ்லிம் நாடு களில் இருந்து அவருக்கு கொலை மிரட்டல் எழுந்தது.

இந்நிலையில், சல்மான் ருஷ்டிக்கு எதிராக ஈரானின் அப்போதைய தலைவர் அயதுல்லா கொமேனி 1989-ல் “ஃபத்வா“ (மத உத்தரவு) பிறப்பித்தார். மத சட்டத்தின் அடிப்படையில், ருஷ்டி மரண தண்டனை குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அவரது தலைக்கு விலையாக 2.8 மில்லியன் டாலர் (ரூ.15 கோடி) பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் உள்பட முஸ்லிம் மக்கள் அதிகம் வசிக்கும் நாடுகளில் அந்த புத்தகம் தடை செய்யப்பட்டது. இங்கிலாந்தில் வசித்து வரும் ருஷ்டிக்கு எதிராக ஈரான் அமைப்புகள் அவ்வப்போது ஃபத்வா உத்தரவை நினைவு படுத்தி வருகின்றன.

இந்நிலையில், ஈரானை சேர்ந்த குர்தாத் அறக்கட்டளை என்ற மத அமைப்பு தற்போது ருஷ்டி யின் தலைக்கு மேலும் 5 லட்சம்டாலர் அதிக விலை அறிவித்துள் ளது. மத தடை விதிக்கப்பட்ட ருஷ்டிக்கு, முன்கூட்டியே மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், முஸ்லிம் களை கேலி செய்யும் விதத்தில் அமெரிக்காவில் சினிமா தயாரிக் கப்பட்டிருக்காது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றைய தினம் இவ்வாண்டுக்கான மழலைகள் விளையாட்டு விழா இடம்பெற்றது. யாழ் மாவட்ட முன்பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து நடைபெற்ற இவ்விழாவில் 700இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அவர்களுடைய ஆசிரியர்களும் பங்குகொண்டனர், விழாவில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, யாழ்.அரசாங்க அதிபர், மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பெருந்தோட்ட பொருளா
# இலங்கை பெறும் நன்



பெருந்தோட்டங்களில் மட்டுமே கோப்பியை தேயிலை பிரதியீடு செய்யவில்லை. ஆனால் இலங்கைப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் 1840 இலிருந்து தனது நிலைபேறு பொருட்டு பெருந் தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட வரிகள் கட்டணங்களலேயே பெருமளவில் தங்கியிருந்தது. உள்ளூர் வியாபாரம் தொழில் முயற்சியிலேயே நேரடியாகவோ மறைமுகமாகவோ பெருமளவில் தங்கியிருந்தது. பெருந்தொகைக்கு பணம் கொடுத்து வங்கியாளர்கள்,செட்டியார்கள் செல்வந்தர் ஆனார்கள். அத்துடன் ஏற்றுமதி வருவாய், அரிசி மற்றும் தேவைப்பாடுகளின் இறக்குமதிக்கு பணம்கொடுத்தது. ஏனெனில் பெருந்தோட்டப் பயிர்ளைத் தவிர இலங்கை எதனையும் உற்பத்தி செய்யவில்லை. பொருளாதாரத்தை விரிவுபடுத்த அரை மனதாக பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் காலனித்துவ காலப்பகுதியில் பெருந்தோட்ட விவசாயத்திலேயே கூடுதலாக ஈடுபட்டிருந்தது.

புதிதாக தேயிலை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தோருக்கு இது அனுகூலமாயிருந்தது. குடியாட்சி அவர்களில் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்க அளவு அரசியல் அதிகாரம் செல்வாக்கு அளித்ததுடன் எமது பெருந்தோட்ட சங்கத்தின் உரிமைகள், சங்கத்தின் உறுப்பினர் ஒருவரை கவர்னரின் சட்டமன்றிற்கு பிரேரிக்கும் உரிமையினால் மிகை யாக்கப்பட்டது. அதே அளவுக்கு உதவியாக இருந்த உட்கட்மைப்புகள, அரச மற்றும் தனியார்கோப்பி முயற்சிக்கு தூண்டப்பட்டதுடன் தேயிலைத் தேவைக்கு அநேகமாக மொத்தமாக இசைவாக்கமடைந்தது.

நாட்டில் ஏலவே நிறுவப்பட்டிருந்த வர்த்தக நிறுவனங்களிலும் அதுவே நடந்தது. வர்த்தகப் பொறிமுறை, தரகு, பெருந்தோட்ட சங்கம் மற்றும் மலைநாட்டில் சிறிய தங்குமிடம் போன்ற நகரங்கள் அவர்களது விளையாட்டு சமூக களரிகளுடன் அங்கிலிக்கன் தேவாலயம் மற்றும் சற்றே குறைய ஆங்கிலக் கட்டமைப்பு கட்டடக் கலைபெருந்தோட்டக்காரர் மற்றும் அவர்களது மனைவிமாரின் தேவைகளையும் விருப்பங்ளையும் மனதில்கொண்டு அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு சில புதுப்பித்தல் தேவைப்பட்டன. அதிகம் செலவில்லாத பச்சைத் தேயிலைகளை பதப்படுத்துவதற்கு தொழிற்சாலைகள் என்பவை முக்கியமானதாயும் செலவு கூடியதாகவும் இருந்தது. உள்ளூர் கைத்தொழில் பொருட்டு லண்டன் மின்சிங்லேனில் நடாத்தப்பட்டதை ஒத்த ஏல முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முதலாவது ஏலம் 1883 இல்கொழும்பு வர்த்தக இல்லமான சோமவில் அன்ட் கம்பனி (Somervile & Co.) வளவில் நடாத்தப்பட்டது.

1891 இல் சிலோன் தேயிலைத் தொகுதியொன்று லண்டனில் பவுன்ட் 36 ஸ்ரெலிங் 15 இற்கு ஏலத்தில் போய் சாதனை படைத்தது. தசாப்த முடிவில் தேயிலையானது ஏற்றுமதி அளவு, வருவாய், பயிரிடப்பட்ட பரப்பு ஆகியவற்றில் கோப்பியை விஞ்சியது. 20ஆம் நூற்றாண்டில் கோப்பி காலே கோப்பிக் காலம் என்பது பழைய உருக்குலைந்த பொருத்தமற்ற சிங்கள பேச்சு வழக்காகிவிடும் இப்போதிருந்து சிலோன் பின்னர் ஸ்ரீலங்கா தேயிலை வரும் நாடாக இருக்கும்.

கோப்பிக் கைத்தொழிலின் வீழ்ச்சியுடன் இலங்கையின் மலைநாட்டுத் தோட்டங்களின் உரிமைத்துவத்தில் பெரும் இணைப்பு ஏற்பட்டது. ஆரம்பக் கோப்பி பயிர்ச் செய்கையாளர்கள் பெரும்பாலும் தனி உரிமையாளர்களாக இருந்தபோதும் சிலர், 1840 களில் பெருந்தோட்டங்களைக் கொள்வனவு செய்து ஆனால் அவற்றினைத் தனியே கவனிக்க முடியாதிருந்த பிரித்தானிய சிவில் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள், மற்றும் தேவாலயத்தில் பணியாற்றுவோருக்கு முகாமையாளர்களாக பணியாற்றினர். ஆனால் வெளிறல் நோய் காரணமாக முயற்சி குறைவாக இருந்தபோது இந்த உரிமையாளர்கள் அண்மைய பெறுமதியில் கால்பங்கு அல்லது அதனிலும் குறைவாக அவற்றை விற்றனர். இதன் விளைவாக சில உரிமையாளர்கள் பெருந்தோட்டங்களுக்கு அல்லது தோட்டக் குழுக்களுக்கு உரிமையாளர்களானார்கள்.

1861 இல் ஏற்கெனவே இணைந்த கையிருப்புக் கம்பனிகளின் இணைப்புக்கான ஆணை வழங்கப்பட்டு சட்டமியற்றப்பட்டது. நூற்றாண்டு மாற்றத்துடன் அனேகமான இலங்கைத் தோட்டங்கள் அத்தகைய கம்பனிகளுக்கு சொந்தமாயிருந்தன. அவற்றுள் சில இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டு ஸ்ரேலிங் கம்பனிகளாகவும் (Sterling companies), பிற இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு ருப்பி கம்பனிகளாகவும் (Rupee companies) அறியப்பட்டன. அவர்களது ஐந்தொகை எந்த நாணய வடிவில் தயாரிக்கப்பட்டு இருந்தபோதும் இக்கம்பனிகளின் அநேகமான பங்குதாரர்கள் பிரித்தானிய கம்பனிகளாவே இருந்தன. அவர்கள் சில சமயங்களில் இலங்கை வருவார்கள் அல்லது வருவதே இல்லை. அவர்களது பங்கிலாபம் அவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கப்பெறும் வரை தமது தோட்டங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்றோ பராமரிக்கப்படுகின்ற என்றோ அவர்கள் கவலைப்படுவதில்லை. இத்தோட்டங்களின் முகமை, தேயிலை பயிரிடுகை, உற்பத்தி, விற்பனை ஆகிய அனத்தும் இந்நோக்கம் பொருட்டு இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முகமை இல்லங்கள் அல்லது முகமைக்கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டன. அக்கறையற்ற, வருகை தரா உரிமையாளர்கள் சார்பில் செயற்படும் இக் கம்பனிகள் அவர்களது பொருளாதார அளவையும் அவர்களது தோட்டங்களின் தோட்டக்காரர்களின் கீழ்ப்படிவையும் வலிந்து பெறகூடிய நிலையிலிருந்த காரணமாக இந்நிறுவனங்கள் தேயிலைக் கைத்தொழிலை ஆக்கிரமித்தன.

ஒரு காலத்தில் பெருந்தோட்ட முதலாளிமார்களாக தமது தோட்ட விறாந்தையிலிருந்து அளவீடு நடாத்தி வந்த பெருந்தோட்டக்காரர் பணியாளர் நிலைக்குத் தரமிறக்கப்பட்டனர். இக்கைத்தொழில் வரலாற்றை அறிந்த ஒருவர் பல உரிமையாளர்கள் வங்கரோத்து நீதிமன்றங்களுக்கு சென்று ஒரு காலத்தில் தமக்கு சொந்தமாக இருந்த காணிகளில் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றினார்கள் என்று கூறியுள்ளார். முகவராண்மை இல்லங்களினால் சம்பளம் வழங்கப் பெற்று காலத்துக்குக் காலம் வந்து கண்காணிப்பாளர்களிடம் எதைச் செய்வது எப்படிச் செய்வது எனக்கூறும் வருகை தரும் முகவராண்மைகளினால் இவர்களது நிலை மோசமடைந்தது.

உலகிலேயே மிகச் சிறந்த கறுப்புத் தேயிலை தயாரிப்பு முறை எனத் ஸ்தாபிக்கப்பட்ட முறைகளுக்கேற்ப பெருந்தோட்டங்களில் வேலை நடைபெற்று வந்தது. தேயிலைப் பயிர் செய்கைக்கும் உற்பத்திக்கும் பெரும் உழைப்பு தேவைப்பட்டதாக இருந்து வந்தது. இன்னமும் இருந்து வருகின்றது. அநேகமாக தென் இந்தியாவிலிருந்து கோப்பி பயிர்ச் செய்கைக்கு என்று வந்த பணியாளர்க ளால் இவ்வுழைப்பு வழங்கப்பட்டது.

கோப்பி பயிர்செய்கைக்கான உழைப்பு காலத்துக்குக்குரியதாயிருந்ததுடன் கோப்பி காலத்தில் பணியாளர் கப்பல் மூலமாகவும் ரயில் மூலமாகவும் இடம்பெயர்ந்து வந்தனர். ஆனால் தேயிலை வருகையுடன் உழைப்பு ஆண்டு முழுவதும் தேவைப்பட்டதுடன் இந்தியர்கள் நிரந்தர குடியிருப்பாளர்களானார்கள். இது காலனித்துவ இலங்கையின் பல் கலாசார இனக்கலப்பின் மற்றுமொரு கூறாக இருந்தது.



கொழும்பிலோ லண்டனிலோ ஏலத்துக்கு விடப்படுவதற்கு முன் ஒவ்வொரு தோட்டத் தேயிலயையும் மாதிரி பார்த்து அதன் தரம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு கொழும்பில் முகவர் இல்லங்களால் (The agency houses) நிபுணத்துவ தேயிலை சுவைஞர் (expert tea tasters) குழு நியமிக்கப்பட்டதது. தரகர்களும் கொள்வன வாளர்களும் கூட அவர்களது சொந்த சுவைஞரை வைத்திருந்தனர். இவ்விரு பகுதி சுவை

# தாரத்தால்
# மைகள்




பார்ப்போர்களுமே ஏலத்தில் பங்கேற்றதுடன் பிற்காலத்தில் தேயிலைக் கைத்தொழில் தொடர்பான வர்த்தக கம்பனிகளில் சிரேட்ட முகமைத்துவத்தைக் கொண்டிருந்தன. 1890 இன் பிற்பகுதிகளில் அக் கைத்தொழிலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தபோதும் 1890 இன் பிற் பகுதிகளிலிருந்து இன்றுவரை இது உண்மையாக உள்ளது.

ஸ்தாபிக்கப்பட்ட பின் தேயிலை வர்த்தகத்தின் கட்டமைப்பில் சிறிய மாற்றமே ஏற்பட்டது. இலங்கை வர்த்தக கூடம் (1839இல் தாபிக்கப்பட்டது) (Ceylon Chamber of Commerce) கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம் (1894 இல் தாபிக்கப்பட்டது) (Colombo Tea Traders Association) ஆகியவற்றின் மேற்பார்வையில் காலனித்துவ காலம் முழுவதும் செயற்பாட்டு நடவடிக்கைகள், முகமைத்துவமுறை, அல்லது உரிமைக் கட்டமைப்பு ஆகியவற்றில் சிறிய மாற்றங்களுடன் அது தொடர்ந்து பணியாற்றியது. அக்காலகட்டத்தில் இரண்டு உலகப்போர்கள் மற்றும் உலகளாவிய வீழ்ச்சியை அது சந்திக்க நேர்ந்தது. ஒரு சில இலங்கையர்கள் (1915 இல் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட தோமஸ் அமரசூரிய போன்ற) இவ்வர்த்தகத்தில் நுழைந்தபோதும், அது தொடர்ந்தும் பிரித்தானியர் ஆதிக்கத்திலும் களரிகள் நிறைந்ததாகவுமே காணப்பட்டது. 1925 இல் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் (Tea Research Institute) ஒன்று ஸ்தாபிக்கப் பட்டது. அது 1930 களின் பிற் பகுதிகளில் பெருந்தோட்டக்காரைப் பயமுறுத்திய கோப்பிவெளிறல்நோய் ஏற்படுத்திய tea totrix மயிர்க்கொட்டியின் தாக்கத்தை எதிர்ப்பதற்கு பல வழிகளைக் கண்டறிந்தது.

வெளிப்படையான முதல் சர்வதேச முயற்சியானது ஏற்றுமதிக்குப் போதுமான தேயிலை வழங்கல் உறுதிசெய்யப்பட்ட பின் 1890களில் ஆரம்பமானது. பிரித்தானிய இராச்சியத்தின் பல்வேறு வர்த்தக காட்சிகள் 1893இல் சிக்காகோவில் உலகச் சந்தை மற்றும் 1900இல் பயனுறுதி மிக்க பாரிஸ் கண்காட்சி ஆகியவற்றில் சிலோன் தேயிலை வெகுவாக பிரபலப்படுத்தப்பட்டது. அத்துடன் இத்தேசிய முயற்சிகளுக்கு மேலதிகமாக பல உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் தமது குறிப்பிட்ட வர்த்தக இனத்தையும் பிரபலப்படுத்தினர்.

1932இல் தேயிலை பிரசார சபை எனும் தனியார் கைத்தொழில் முனைப்பு இன்றைய தேயிலைச் சபையின் முன்னோடியாக உருவாக்கப்பட்டது. இரண்டு வருடங்களின் பின் தரம் குறைந்த தேயிலை ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடைசெய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1946 இல் லண்டனில் முதலாவது தேயிலை விற்பனை நிலையம் திறக்கப்பட்டது மற்றுமொரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். ஆனால் இவை அனைத்தும் படிப்படியான முன்னேற்றங்களே ஆகும். சுதந்திரத்திற்குப் பின்னரே இலங்கை தேயிலைக் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது.

**இலங்கைத்தேயிலையின் வரலாறு**

**கோப்பி அரசனாக இருந்தபோது**

ஆச்சரியமாக இருப்பினும் சிலோன் தேயிலையின் கதை கோப்பியுடனயே ஆரம்பமாகியது. இலங்கையில் கடைசியாக இருந்த கண்டி சுதேசிய ஆட்சி பிரித்தானிய முடிக்கு சரணடைந்து ஐந்து வருடங்களே ஆன பின் 1820இல் கதை ஆரம்பமாகியது.



அவ்வேளையில் தீவின் பிற்பகுதிகள் ஒரு தலைமுறைக்கு மேலாக பிரித்தானிய காலனியாக இருந்தது. அதன் உடமை இந்தியா மற்றும் தூரகிழக்கு நாடுகளிலும் முடியாட்சி ஆர்வத்திற்கு மிக முக்கியமானதாக இருப்பினும் இராணுவ நிலைப்பாட்டைப் பேணுவதற்கும் தேவைப்படும் உட்கட்டமைப்புக்குமான செலவு தடையாக இருந்தது. வரிவிதிப்பின் மூலம் வருவாயை அதிக ரிப்பதனால் மட்டும் இடைவெளியை நிரப்ப முடியாதிருந்தது முதல் ஆளுநர் பிரெட்ரிக் நோத் (Frederic North) 1798இல் பதவியேற்றது முதல் தொடர்ந்து வந்த ஆளுநர்களுக்கு பிரச்சி னையாக இருந்தது எவ்வாறு காலனிகள் மற்றும் தமது படைகளின் செலவைத் தாங்குவது என்பதாகும். கோப்பியுடனான பரிசோதனைகள் ஏற்கெனவே 1824 அளவில் இலங்கையின் ஐந்தாவது காலனித்துவ ஆளுநர் எட்வர்ட் பார்ன்சின் (Edward Barnes) வருகையுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவரே முதன் முதலாக கோப்பியின் மூலம் காலனியின் பல்லாண்டு செல்மதி நிலுவைக்குத் தீர்வு கண்டார். தாவரம் இயற்கையிலேயே மத்திய மலைப் பிரதேசத்தில் வளர்வது காணப்பட்டது இதில் ஒரு சந்தர்ப்பத்தைக் கண்ட பான்ஸ் உத்தியோகத்தர்களின் ஆதரவுடன் பெரிய அளவில் பயிர்ச்செய்கை ஆரம்பித்தார். மத்திய மலைநாட்டு காணிகள் ஒரு சில பென்சுக்கு மிக மலிவாக விற்கப்பட்டன. கோப்பி பயிரிடுகை, ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைகளுக்கு உத்தியோக நிதி அர்ப்பணிக்கப்பட்டது. பெருந்தோட்ட உரிமையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் ஊக்குவிப்பும் ஆதரவும் வழங்கப்பட்டது. மிக முக்கியமாக பார்ன் உட்கட்மைப்பினை கண்டி முதல் கொழும்பு வரையான அனைத்து முக்கிய கிளை வீதிகள் அடங்கலான- வீதி வலையமைப்பினை ஏற்படுத்தினார். இதனால் கோப்பி பயிரிடுவோர் தமது உற்பத்தியை நகரத்திற்கும் அதன்பின் இங்கிலாந்து சந்தைக்கும் கொண்டு செல்வதற்கு ஏதுவானது.

பான்சின் பதவிக்காலம் 1831 இல் முடிடைந்தது. அச்சமயத்தில் கோப்பித் தொழில் முயற்சி (இன்று அதனை கைத்தொழில் என நாம் அழைக்கின்றோம்) கண்டியைச் சூழ்ந்த நாட்டின்பெரும் பகுதியில் பரவியிருந்நதுடன் தெற்கு நோக்கியும் மேல்நோக்கி முன்னைய கன்னிக்காடுளை நோக்கியும் பரவியது. 1838 இல் ஜமெய்க்காவில் அடிமைத் தளை ஒழிப்பு நாட்டின் கோப்பிக் கைத்தொழிலில் வீழ்ச்சியை ஏற்பத்தியது. இலங்கைக் கோப்பியில் ஏற்பட்ட செழிப்பு மலைநாட்டில் முன்னர் காணப்படாத தொன்றாக இருந்தது.

1840 இன பிற் பகுதிகளில் பின்னடைவுகள் இருந்தபோதிலும் தொழில் முயற்சி தொடர்ந்தும் வளர்ச்சியுற்றது. 1870இன் நடுப்பகுதியில் இலங்கை மிகப்பெரும் கோப்பி உற்பத்தியாளர் ஆனது. தொழில் முயற்சியால் பெறப்பட்ட இலாபமும் வருவாய்களும் காலனியை செழுமையான நாகரீகமான நவீன பேரரசுக் காட்சிப் பொருளாக்கியது. கோப்பி மரம் நிறைந்த மலைப் பகுதிகளில் ரயில்வேக்களும், உள்ளே வீதிகளும் செதுக்கப்பட்டன. கொழும்பு நகர் ஒளியூட்டப்பட்டு அதன் துறைமுகம் அலைதாங்கிகளுடனும் புதிய துறை மேடைகளுடனும் அபிவிருத்தி செய்யப்பட்டது. பயனுறுதிமிக்க அரசாங்கமும் சிவில் நிர்வாகமும் ஒழுங்காகச் செயற்பட்டு வந்தது. எனினும் இலங்கை மக்கள் எதிலும் தமது கருத்தை வெளியிட முடியாதிருந்தது. இந்நிலை குறுகிய காலத்திற்கே இருந்தது. 1869இல் கோப்பி-கறல் எனும் புதிய தாவர நோயின் முதல் அறிகுறிகள் மதுல்சீமா பெருந்தோட்டத்தில் தோன்றியது. இந்நோய் இலங்கையில் கோப்பி தொழில் முயற்சியை முற்றாகத் துடைத்தொழிப்பதற்கு ஒரு தசாப்தத்துக்கு மேலானது.

### இராணுவ மேஜர் மீதான தாக்குதல்:

# அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மீது பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படும்

**மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர்**

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா இராணுவ மேஜர் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் எந்தவித பாரபட்சமும் இன்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக போது எந்த ஒரு அழுத்தங்களும் பொலிஸாருக்கு வழங்கப்படவில்லையென்று தெரிவித்த அவர், அவ்வாறு எந்த ஒரு அழுத்தங்களுக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படும் கொம்பனித் தெரு ஹோட்டலிலுள்ள சி.சி.ரி.வி. கெமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளின் பிரதிகளை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு பெற்றுக் கொள்ள நீதிமன்ற அமைதியை பொலிஸார் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 13 சி.சி.ரீ.வி. கெமராக்களில் இந்தக் காட்சிகள் பதிவாகியுள்ளதாக தெரிவித்த அவர், அதனடிப்படையில் விசாரணைகளை மேலும் முடுக்கிவிடவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மாலக சில்வா இராணுவ மேஜர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க மேலும் விபரிக்கையில்: மாலக சில்வா இராணுவ மேஜரை தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் நேற்று காலை முதல் கூரை மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். இங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆறு சிறைக்கைதிகள் கூரைகளின் மேல் ஏறி இந்த போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

# இரண்டாவது காலாண்டில் மொ.தே. உற்பத்தியில் 6.4 வீத வளர்ச்சி

2012 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த தேசிய உற்பத்தியானது முந்தைய வருடத்திலிருந்ததைவிட 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

இவ்வருடம் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் விவசாயத்துறை 9.1 சதவீதத்தினால் வளர்சசியடைந்துள்ளது. முந்தைய வருடத்தின் 2 ஆவது காலாண்டுப்பகுதியை விட இது 1.8 சதவீதம் அதிகமாகும். இதேவேளை கைத்தொழி ல்துறை வளர்ச்சி வீதம் தொடர்ந்தும் 9.5 சதவீதமாக உள்ளது. சேவைகள்துறை வளர்ச்சி வீதம் 8.8 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதமாகியுள்ளது.

# பஸ் பள்ளத்தில் வீழ்ந்து விபத்து: 31 பேர் காயம்

கண்டி - மஹியங்கனை வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 31 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டியில் இருந்து அம்பாறை நோக்கி பயணித்த சொகுசு பஸ் வண்டியொன்று "ஹன்னஸ்கிரிய, கலேகெலே பகுதியில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துள்ளாகியது.

காயமடைந்த 31 பயணிகள் மெத மஹானுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்து தொடர்பாக மெத மஹானுவர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

கிழக்கில் அட்டாளைச்சேனைப் பிரதேச மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திறகு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (17) காலை அட்டாளைச்சேனை மீனவ அமைப்புக்கள் கடலுக்குச் செல்வதை பகிஸ்கரித்தது கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த பாரியளவிலான ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்களில் மீன்பிடிக்கும் சிலரினால் இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அட்டாளைச்சேனை கடல் எல்லைப் பிரதேச த்தில் வைத்து தாம் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதோடு தமது மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப் பட்டுள்ளதாகவும் அட்டாளைச்சேனை மீனவர்கள் தெரிவித்தனர்.

# வவுனியா கால்நடை உற்பத்தி பண்ணையில் தினமும் 7500 கோழிகுஞ்சுகள் உற்பத்தி

வவுனியா கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பூந்தோட்ட பண்ணையில் கடந்த வருடம் ஒரு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று இருபத்தி மூன்று கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக வவுனியா கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.தபோதினி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,கொள்ளைப்புறக் கோழி இனங்களை தாம் உற்பத்தி செய்து வருவதாகவும் இதற்கான தாய் இன கோழிகளை பேராதெனிய பிரதேசத்தில் இருந்து கொள்வனவு செய்து அதன் மூலமாக தாம் இப்போது கோழி குஞ்சகளை உற்பத்தி செய்வதாக தெரிவித்த அவர் இவ்வாறான குஞ்சுகளை தாம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அரச திட்டங்களின் மூலம் விநியோகித்து வருவதாகவும் ஏனைய குஞ்சுகளை கால்நடை வைத்திய அலுவலகங்களின் ஊடாக ஒரு குஞ்சு 80 ரூபா வீதம் விற்பதாகவும் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் தாம் குறைந்தளவிலான உற்பத்தியை மேற்கொண்ட போதிலும் தற்போது மக்களின் தேவைகருதி அதேயளவான மனிதவலுவுடன் நாளாந்தம் தாம் 7500 குஞ்சுகளை உற்பத்தி செய்வதுடன் அவற்றை மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற பிரதேசங்களுக்கு விநியோகிப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் 93 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பித்திருந்த இப்பண்ணையின் கோழிக்குஞ்சு உற்பத்தியானது 2009 ஆம் ஆண்டுகளில் 56,460 குஞ்சுகளையும் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதியில் அதன் உற்பத்தியை இரட்டிப்பாக்கி 2010 ஆம் ஆண்டு 102,714 குஞ்சுகளையும் 2011 ஆம் ஆண்டு 116,223 குஞ்சுகளையும் உற்பததி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# தங்க பிஸ்கட்டுக்களுடன் ஒருவர் கைது

10 மில்லியன் ரூபா பெறுமதியான 1.5 கிலோ தங்க பிஸ்கட்டுக்களை இந்தியாவின் மும்பைக்கு கடத்த முற்பட்ட குற்றசசாட்டின் பேரில் 43 வயதான வர்த்தகரொருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 100,000 ரூபா அபராதம் அறவிடப்பட்டதுடன், தங்க பிஸ்கட்டுக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

தங்கம் கடத்துகின்ற ஒருவர் சார்பில் செயற்படும் முகவர் இவரென விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

# கஞ்சா விற்பனை: ஒருவர் கைது

நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஆறு கிலோகிராம் கஞ்சாவுடன் நபர் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்ததாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மடம்பெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நிலத்தின் கீழ் பங்கரொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்த கஞ்சா போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் இராணுவத்திலிருந்து விலகிய முன்னாள் வீரராவார். இவர் நீண்ட காலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நீர்கொழும்பு இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் சந்தேக நபரை கைது செய்தனர்.



இராணுவ அதிகாரியை தாக்கிய குற்றச்சாட்டுக்காக பொலிஸில் சரணடைந்த அமைச்சர் மேர்வின் சில்லாவின் மகன் மாலக்க சில்வா நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதை படத்தில் காணலாம்.

# மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் சான்றிதழ் வழங்கல்

மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரி மற்றும் அட்டாளைச்சேனை தேசியக் கல்விக் கல்லூரிகளின் கற்பித்தல் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கல்வியமைச்சின் செயலாளர் கோத்தாபே ஜயரட்ன, தேசிய கல்வி கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் எம்.அபேரட்ண பண்டார, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.இஸ்மாயில், மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.பாக்கியராசா, அட்டாளைச்செனை தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி ஏ.எல்.ஏ.றசூல் உட்பட உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரி மற்றும் அட்டாளைச்சேனை தேசியக் கல்விக் கல்லூரிகளில் 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டுவரை கற்பித்தல் தேசிய டிப்ளோமா பாடநெறியை மேற்கொண்ட 1106 கற்பித்தல் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கலர் குளிர் பானங்களில் என்ன இருக்கிறது?

ஆரோக்கிய நாதம்



எந்த விழாக்களானாலும் பார்ட்டியானாலும் சா.்.ப்ட் டிரிங்ஸ் எனப்படும் குளிர் பானங்கள் இடம் பெறாமல் இருப்பதில்லை. இந்த வண்ண திரவங்களால் உடலுக்கு ஏதேனும் நன்மை கிடைக்கிறதா? என்றால் நிச்சயமாக இல்லை. மாறாக அவற்றுள் அடங்கியுள்ள நச்சுப் பொருட்கள் உடலுக்கு கேடு செய்கின்றன என்ற விழிப்புணர்வாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

***பற்கள் பாதிப்பு அடைகின்றன:***

பொதுவாக எல்லா குளிர் பானங்களும் அமிலச் சுவையுடன் இருக்கின்றன. இதில் கலந்துள்ள அமிலங்கள் பற்களின் எனாமலைப் பதம் பார்த்து கரைத்து விடுகின்றன. மேலும் அதிலுள்ள சீனிச் சத்து பற்களைத் தாக்கும் பாக்டீரியாக்கள் வளர உதவுகிறது.

பல குளிர் பானங்களில் அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் நச்சுப்பொருள் எச்சம் உள்ளது என்று 2003-ல் அறிவியல்-சுற்றுச்சூழல் மையம் அறிக்கை வெளியிட்டது. இது செவிடன் காதில் சங்காய் அலட்சியப் படுத்தப்பட்டு இன்றும் நாகரீகமான பானமாகவே பொதுவாக கருதப்பட்டு பயன்படுகிறது. இதன் கெடுதல் தன்மை ஒரு புறம் இருக்கட்டும் இத்தகைய பானங்களில் எந்த வித ஊட்டச்சத்தும் இல்லை என்பதே உண்மை. ஒரு கரண்டி சீனிக்கு சமமான சீனிச் சத்தும் தண்ணீரும் உடலுக்கு தேவைப்படாத சில இரசாயனமும் தான் அதில் உள்ளது. தேவைக்கு அதிகமான சீனிச் சத்து இரத்தத்தில் கொலெஸ்ட்ராலை அதிகரிக்க செய்யும். பின்னர், நீரிழிவு, இரத்த அழுத்தம் , இதய நோய், பக்க வாதம் எல்லாம் தொடர்ச்சியாக வருவதைத் தவிர்க்க முடியாது. மாற்றாக டயட் குளிர்பானங்கள் சிறந்தது என்று சொல்வதற்கில்லை. அதில் சீனிக்குப் பதில் யளியசவயஅந என்ற செயற்கை இனிப்பூட்டி இரசாயனம் சேர்க்கப்படுகிறது. இது தாகத்தைத் தணிக்காது. பசியும் தாகத்தையும் அதிகரிக்கச் செய்யும். மைக்ரேன் எனும் ஒற்றைத் தலைவலி, மந்தம் மற்றும் மறதியை இந்த செயற்கை இனிப்பூட்டி உருவாக்கும்.

## தாகம் ஏற்பட்டால் உடனே தண்ணீர் மட்டுமே அருந்த வேண்டும். ஜூஸ் அதற்கு தீர்வாகாது



பக்கெட்டுகளில் அடைத்து வரும் பழச்சாறுகள் பலதும் உண்மையில் பழச்சாறுகள் அல்ல. சீனி, தண்ணீர், அராபிக் கம் எனப்படும் பசை மற்றும் சில இரசாயன வண்ணங்களும் எஸ்சென்சும் தான். பல சா.்.ப்ட் ரீங்க் பொடிகளும் ஆபத்தான வெறும் இரசாயனக்கலவைகளே.


இந்தக் குளிர் பானங்கள் நெடு நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்க பென்ஸாயிக் அமிலமே பயன்படுத்தப்படுகிறது. இது ஆஸ்துமா, பரு, தோலில் வேனல் கட்டி, வெடிப்பு முதலியவற்றை உண்டாக்குகிறது.

எலுமிச்சை பானங்கள் கறுப்பு நிறமாக மாறி விடாமல் இருக்கவும், சல்.்.பர் டையாக்ஸைடு சேர்க்கப்படுகிறது. இது பானங்களில் உள்ள நறுமணம் ஆவியாகிப் போய்விடாமல் பாதுகாக்கிறது. இந்த சல்.்.பர்டையாக்ஸைடு, ஒரு நச்சு முறிவு மருந்துதான். நலமாக உள்ள ஒருவர் தொடர்ந்து கலர் அருந்தியதும் மந்தநிலை, தெளிவற்ற பார்வை, தோலில் வெடிப்பு, வீக்கம், சோர்வு, இதயத்தில் ஒருவித இறுக்கம், அதிர்ச்சி, திடீர் கோபம், அதிர்ச்சியில் இறப்பு போன்றவை ஏற்படுகின்றன. அப்படி இருந்தால் ஆரோக்கியமான உடலில் கலர் மூலம் சேர்ந்த சல்பர்டையாக்ஸைடே காரணம்.

பானங்கள் நறுமணமாக இருக்க, கா.்.பைன் சேர்க்கப்படுகிறது. கா.்.பைன், உண்மையில் போதை தரும் ஒரு மருந்துதான். இது அதிகமானால் மத்திய நரம்பு மண்டலம் அடிக்கடி ஊக்குவிக்கப்படுவதால் விரைவில் தளர்ச்சியும் வந்துவிடுகிறது. இதனால் தூக்கமின்மை, நரம்புக் கோளாறு, எரிச்சல், வயிற்றுப் பொருமல், மனக்குழப்பம், இதயம் வேக வேகமாகத் துடித்து ஒரு விதப் படபடப்பு முதலியன ஏற்படுகின்றன. சிறுநீரப் பைகள், வயிறு முதலியவற்றில் புற்றுநோய், இரத்தக்கொதிப்பு, மேலும் ஆறுவிதமான புற்றுநோய்கள் அடிக்கடி கலர் அருந்துகிறவர்களுக்கு வருகிறது. அடிக்கடி இளவயதில் கலர் அருந்தும் தம்பதிகளுக்கு பிறவியிலேயே குறைபாடு உள்ள குழந்தைகள் பிறந்துள்ளன.

இத்தகைய ஊக்க பானங்களை மதுவுடன் சேர்த்து அருந்துவது உடலுக்கு மிக்வும் கேடு செய்யும். ஏனெனில் இவை தற்காலிகமாக மூளையை தூண்டுகின்றன. ஆனால் மது மூளையை மந்தப்படுத்துகிறது. இந்த முரணபட்ட தன்மையால் மனிதனின் நரம்பு மண்டல கட்டுபாடு சீர்குலைகிறது. மயக்கம் வாந்தி, இதயத் துடிப்பில் சீரின்மை உண்டாகிறது.

## நீங்கள் அறிந்திருக்கவேண்டிய வேறு முக்கியமான தகவல்கள் எவை?



உங்கள் பிள்ளை உட்கொள்ளும் எல்லா மருந்துகளின் பட்டியலையும் வைத்துக்கொள்ளவும் மற்றும் அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் காண்பிக்கவும்.

உங்கள் பிள்ளையின் மருந்துகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டாம். வேறொருவரின் மருந்தை உங்கள் பிள்ளைக்குக் கொடுக்க வேண்டாம்.

வார இறுதி நாட்கள், விடுமுறை நாட்கள், மற்றும் விடுமுறைச் சுற்றுலா நாட்கள் வரை நீடிக்கக்கூடிய, போதியளவு அமொக்ஸிஸிலின் மருந்தை எப்போதும் கைவசம் வைத்திருக்க நிச்சயமாயிருங்கள்.

அமொக்ஸிஸிலின் கப்சியூல் மற்றும் மெல்லும் மாத்திரைகளை அறை வெப்ப நிலையில், குளிரான, உலர்ந்த இடத்தில் சூரிய வெளிச்சம் படாமல் வைக்கவும். குளியலறை அல்லது சமையலறையில் வைக்கவேண்டாம். அமொக்ஸிஸிலின் திரவ மருந்தை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். இந்த மருந்தை உறை நிலையில் வைக்க வேண்டாம். காலாவதியான எந்த மருந்துகளையும் வைத்திருக்கவேண்டாம். காலாவதியான மருந்துகளை எறிந்து விடுவதற்கான மிகச் சிறந்த வழியைப் பின்பற்றவும். அமொக்ஸிஸிலின் மருந்தை உங்கள் பிள்ளையின் கண்களில் படாதவாறு மற்றும் எட்டாதவாறு, ஒரு பூட்டப்பட்ட பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

## அன்டிபையோடிக் தொடர்பான வயிற்றோட்டம் என்பது என்ன?



அன்டிபையோடிக் உட்கொள்ளும் சுமார் 18% (ஏறக்குறைய 5 இல் 1) கைக்குழந்தைகளுக்கும் நடை குழந்தைகளுக்கும் வயிற்றோட்டம் உண்டாவது சகஜமானதே. எந்த வகையான அன்டிபையோடிக்னாலும் இது ஏற்படலாம். 2 வயது அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளில் அன்டிபையோடிக் தொடர்பான வயிற்றோட்டம் ஏற்படுவது குறைவானதாகவே இருக்கின்றது.

அதிகமான பிள்ளைகளில் இந்த வயிற்றோட்டம் கடுமையற்றதாகும். உங்கள் பிள்ளை போதிய அளவு நீராகாரத்தை (திரவங்கள்) உட்கொள்ளாவிட்டால் அல்லது மலம் கழிக்கும்போது ஏராளமான நீர்மத்தை இழந்தாலேயன்றி இந்த வயிற்றோட்டம் பொதுவாக ஆபத்தானதல்ல. உங்கள் பிள்ளை போதிய அளவு நீராகாரத்தை குடிப்பதை உறுதி செய்யவும். சிறுநீரின் அளவு குறைதல், சினம் கொள்ளுதல், களைப்பு, வாய் உலர்தல் என்பன உடலில் நீர் வறட்சி ஏற்பட்டதற்கான அடையாளங்களாகும். ஒரு பிள்ளை சந்தோஷமாகவும் விளையாடிய வண்ணமும் இருப்பது உடலில் நல்ல நீர்த்தன்மை இருப்பதை குறிக்கின்றது.

உங்கள் பிள்ளை மலம் கழிக்கும்போது ஏராளமான நீர்மம் வெளியேறினால் அல்லது உடலில் நீர்வறட்சி உண்டென்பதற்கான அடையாளங்களைக் காட்டினால் மருத்துவ உதவியை நாடவும்.

***அன்டிபையோடிக் தொடர்பான வயிற்றோட்டத்தின் அடையாளங்களும் அறிகுறிகளும்***



அன்டிபையோடிக் சம்பந்தமான வயிற்றுப்போக்குள்ள ஒரு பிள்ளை, அன்டிபையோடிக் மருந்துகள் உட்கொள்ளும்போது இளகிய மலம் அல்லது தண்ணீர் போன்ற மலத்தைக் கொண்டிருப்பான். பெரும்பாலான ‘சமயங்களில், வயிற்றுப்போக்கு 1 முதல் 7 நாட்கள் வரை நீடிக்கும்.

வயிற்றுப்போக்கு பெரும்பாலும், அன்டிபையோடிக் மருந்து உட்கொள்ளத் தொடங்கிய இரண்டாம் நாள் மற்றும் எட்டாம் நாளுக்கிடையில் தொடங்கும். ஆயினும், அன்டிபையோடிக் உட்கொள்ளத் தொடங்கிய முதல் நாளில் வயிற்றுப் போக்கு தொடங்கலாம், அல்லது நிறுத்தப்பட்டு ஒரு சில வாரங்களுக்குப்பின் தொடங்கலாம்.

**அன்டிபையோடிக் தொடர்பான வயிற்றோட்டத்திற்கான காரணங்கள்:**

எங்கள் குடலின் உட்பகுதியில், உணவுச் சமிபாட்டுக்கு உதவி செய்யக்கூடிய கோடிக்கணக்கான நுண்ணிய பக்டீரியாக்கள் , இருக்கின்றன. அன்டிபையோடிக் மருந்துகள் தீங்கு செய்யும் பக்டீரியாக்களை அழிக்கும்போது இந்த “நல்ல“ பக்டீரியாக்களையும் சேர்த்து அழித்துவிடும். இந்த பக்டீரியாக்கள் இறப்பது மற்றும் குடலில் திரும்பவும் வளரும் செயற்பாடு வயிற்றுப் போக்கை ஏற்படுத்தும்.

**சிக்கல்கள்: உடல்நீர் வறட்சி மற்றும் வீக்கம்:**

மேலே விபரிக்கப்பட்ட உடல்நீர், வறட்சி ஆபத்தானதாகலாம். ஒரு வருடத்துக்கும் குறைவான வயதுள்ள குழந்தைகள் உடல்நீர் வறட்சிக்கான மிக அதிக ஆபத்திலிருக்கிறார்கள். இழந்த நீரை ஈடு செய்வதற்காக, உங்கள் பிள்ளை போதியளவு நீராகாரங்கள் குடிப்பதற்கு நிச்சயமாயிருங்கள். உடல்நீர் வறட்சிக்கான அறிகுறிகளை நன்கு அவதானிக்கவும்.

**உடல்நீர் வறட்சிக்கான அறிகுறிகள்:**

குறைவாக சிறுநீர் கழித்தல், தேவையற்ற பரபரப்பைக் காண்பித்தல், சோர்வு, மற்றும் வாய் உலர்ந்துபோதல்

**அன்டிபையோடிக் உட்கொள்ளும் குழந்தைகளில் மிக அபூர்வமாக பெருங்குடல் வீக்கம் ஏற்படலாம்:**

- இரத்தத்தை அல்லது சீதத்தை கொண்டிருக்கக்கூடிய கடுமையான வயிற்றோட்டம்
- காய்ச்சல்
- வயிற்றுவலி
- மிகுந்த பலவீனம்

## உங்கள் பிள்ளையை வீட்டில் பராமரித்தல்

**அன்டிபையோடிக் மருந்துகளைத் தொடர்ந்து கொடுக்கவும்:**



வயிற்றுப்போக்கு வீரியம் குறைந்ததாக மற்றும் உங்கள் பிள்ளை நலமுடன் இருந்தால், அன்டிபையோடிக் மருந்துகளையும் உங்கள் பிள்ளையை வீட்டில் பராமரிப்பதையும் தொடர்ந்து செய்யவும். உங்கள் பிள்ளையின் உடலை நீர்த்தன்மையுள்ளதாக வைத்திருங்கள் பழரசம் அல்லது மென் குளிர்பானங்கள் வயிற்றுப்போக்கை மேலும் மோசமானதாக்கும். எனவே அவற்றைக் கொடுக்கவேண்டாம்.

குறிப்பான சில உணவுகளைத் தவிர்க்கவும். பீன்ஸ் அல்லது உறைப்புள்ள உணவுகளைக் கொடுக்க வேண்டாம்.

அங்கு கிடைக்கக்கூடிய லாபம், கமிஷன் முதலியன போதுமான வையாக இருக்கும் என்பதையும் அறிந்து, அந்தப் பதவியைத் தேடிக்கொண்டார் அவர். அவர் வந்து போவதை ஒருவித பயத்து டனும் பீதியுடனும் பார்த்தன விலங்குகள் எல்லாம். அவர் பக்கம் அவை போவதேயில்லை. இருந்தாலும், நிமிர்ந்து இரண்டு கால்களில் நின்று கொண்டிருந்த விம்பர் என்ற மனிதன், நாலுகால் பன்றியாகிய நெப்போலியனின் உத்தரவுகளைக் கேட்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடப்பது அவைகள் மனதுக்கும் ஓரளவு மகிழ்ச்சி தருவதாக இருந்தது.

பெருமையாகவும் இருந்தது. புது ஏற்பாடு கூட நல்ல ஏற்பாடுதான் என்று நினைக்க அவைகளைத் தூண்டியது. இரண்டு கால் மனிதன் நாலு கால் விலங்குக ளுக்குக் கீழ்ப்பணிந்து நடந்தது ஆனந்தம் தரும் காட்சியாகத்தான் மற்ற விலங்குகளுக்கும்பட்டது. இப்போது மனிதர்களுடன் விலங்கு களின் உறவு முன்பிருந்ததைப் போல இல்லை. நிலைமை மாறி விட்டது.





அது சேமநலப் பாதையில் முன்னேறிக்கொண்டிருந்தது என்பதற்காக, விலங்குப் பண்ணையை மனிதர்கள் குறை சொல்லாமலோ, கேலி செய்யாமலோ, வெறுக்காமலோ இல்லை. முன்பு வெறுத்ததைவிட இப்போது அதை அதிகமாக வெறுத்தார்கள் என்றே சொல்ல வேண்டும். இன்றோ. நாளையோ, கூடிய சீக்கிரத்தில் ஒருநாள் விலங்குப் பண்ணை கவிழ்ந்து அழிந்துவிடும் என்றுதான் மனிதர்களில் ஒவ்வொரு வனும் நம்பினான்.

அப்படி நம்ப வேண்டியது தான் தங்கள் தருமம் என்றும் அவர்கள் எண்ணினார்கள். காற்றாடி யந்திர முயற்சி ஒருக்காலும் பலிக்கப் போவதில்லை என்பது அவர்களுக்குத் தெளிவாகவே தெரிந்தது. மதுக்கடைகளிலும் சத்திரம் சாவடிகளிலும் சந்திக்கும்போது, பேனாவும் பென்சிலும் பேப்பருமாகக் கோடுகள் போட்டு வரைந்து காட்டி, காற்றாடி யந்திரம் சாய்ந்துவிடும் என்பதை, மீண்டும் ஒரு தரம் ஒருவருக்கொருவர் மெய்ப்பித்துக் கொள்வார்கள். சாயாமல் நிமிர்ந்து நின்றாலும் கூட தன் வேலையை அது செய்யவே செய்யாது என்று தலையை ஆட்டிக்கொண்டே செல்வார்கள்.

இருந்தாலும், மிருகங்கள் தங்கள் அலுவல்களைக் கவனித்துக்கொண்டு முன்னேறியது பற்றி அவர்கள் ஒரு நல்ல அபிப்பிராயம் கொள்ளாமலிருக்க முடியவில்லை. மிகவும் சிறப்பான முறையில் விலங்குகள் சுறு சுறுப்பாக பயன் தருகிற மாதிரிக் காரியங்களை செய்கின்றன என்று ஏற்றுக்கொண்டு, மனிதர்களும் அந்த விலங்குப் பண்ணை மிருகங்களுக்கு மரியாதை தரத் தயாராகவே இருக்க வேண்டியதாக இருந்தது.

(நாளை...)





# பெட்ரோலிய பொருட்கள்

பெட்ரோல் என்பது பெட்ரோலியம் எனப் படும் பாறை எண்ணெயில் இருந்து பெறப் படும் ஒரு ஒளியூடுபுகவிடும் திரவமாகும். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடல் வாழ் உயிரினங்கள் கடலுக்குள் புதை ந்து, அதில் பக்டீரியாக்களால் சில வேதி மாற்றங்கள் நிகழ்ந்து பூமிக்கு அடியில் கச்சா எண்ணையாக உருவாகிறது. அதை சுத்திக ரிக்கும்போது பெட்ரோல் மற்றும் இதர பொருட்கள் கிடைக்கின்றன. இது கன இயந் திரங்களில் எரிபொருளாகப் பயன் படுத்தப் படுகிறது. இது பெரும்பாலும் சேதனச் சேர்வை களாலேயே ஆக்கப்பட்டுள்ளது. பெட்ரோலிய மானது பல்வேறு கூட்டுப் பொருட்களால் ஆனது. இதிலிருந்து பகுதிபடக் காய்ச்சி வடித்தல் செயன்முறை மூலம் பெட்ரோல் பிரித்தெடுக்கப் படுகிறது. சாதாரண சூழல் நிபந்தனைகளின் கீழ் இது திரவ நிலையில் காணப்படும். பெட் ரோல் ஆவியாகக் கூடிய திரவமாகும். கச்சா எண்ணை கருப்பு அல்லது கரும் பழுப்பு நிறத் தில் இருக்கும். கச்சா எண்ணையை கொதிக்க வைக்கும்போது கிடைக்கக் கூடியவை.

1.சமையல் எரிவாயு 20 டிகிரி செல்சியஸ்
2.பெட்ரோல் 150 டிகிரி செல்சியஸ்
3.மண்ணெண்ணை 200 டிகிரி செல்சியஸ்
4.டீசல் 300 டிகிரி செல்சியஸ்
5.தார் அல்லது மெழுகு- 400 டிகிரி செல்சியஸ்

உலகில் கச்சா எண்ணை உற்பத்தியில் சவூதி அரேபியா முதன்மை வகிக்கிறது. 60 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா முதலிடத்தில் இருந்தது.


# கத்தரிக்காய்க்கும் சுண்டக்காய்க்கும் கல்யாணம்



காய்கறிகள் தோட்டத்துக்குக் கத்திரிக்கா ராசாவாம் - அந்தக் கத்திரிக்கா ராசாவுக்கு கல்யாணம்தான் பேசவாம், பொருத்தமான பொண்ண தேடி ராசா போனாராம், அடுத்த ஊர் சந்தையிலே வந்து நின்னாராம், இராசா வந்து நின்னாராம், பச்ச மிளகா பொண்ண பார்த்துட்டாராம் - அது, பார்க்க நல்லா அழகுதான்னு நினைச்சிட்டாராம், கிட்ட வந்து தொட்டுப் பார்த்து ஆஹா என்றாராம், வாய்வரை வைத்து காரத்தால துடிச்சுபுட்டாராம், ராஜா துடிச்சு புட்டாராம், ரொம்பவும் துடிச்சுபுட்டாராம், பாவம் துடுச்சுப்புட்டாராம், குட்டி குட்டி சுண்டக்கா கூட்டம் கூட்டமா- அது குவிந்து கிடந்த அழகைப் பார்த்து சொக்கிப் போனாராம், இராசா சொக்கிப் போனாராம், அதுல ஒரு சுண்டக்காய அழைச்சுக்கிட்டாராம், ஆவணியில் கலியாணத்த முடிச்சுக்கிட்டாராம், இராசா முடிச்சுக்கிட்டாராம், ஜோரா முடிச்சுக்கிட்டாராம்...
பீப்பீப்பீ ... டும்டும்டும்... பீப்பர ... பீப்பர ...
பீ... பீப்பீப்பீ டும்டும்டும் ... பீப்பர ... பீப்பர... பீ...

# சிறுவர் அமுதம்

## காகம் ஒன்று காட்டிலே



காகம் ஒன்று காட்டிலே
தாகத்தாலே தவித்தது
வீட்டின் பக்கம் வந்தது
குடம் ஒன்று கண்டது
அந்தக் குடத்தின் அடியிலே
கொஞ்சம் தண்ணீர்
இருந்தது.
கல்லைப் பொறுக்கிப்
போடவே
தண்ணீர் மேலே வந்தது
ஆசை தீர குடித்தது
தாகம் தீர்ந்த காகமும்
வேகமாகப் பறந்தது.

## விடுகதைகள்




1.ஆட்டிவிட்டால் ஆடுவது, அந்தரத்தில் தொங்குவது. அது என்ன?
2.ஆற்றுக்கு அக்கரையில் ஐந்தாறு தென்னை மரம், காய்க்காது, பூக்காது, கண்ணுக்கு எட்டாது. அது என்ன?
3.ஆதவன் உதித்தால் மறைந்திடுவான். ஆயிரம் விளக்கை அணைத்திடுவான். அது என்ன?
4.தாய் தரையில் கிடக்கிறாள், மகள் ராஜாவின் முடியில் இருக்கிறாள். அது என்ன?
5.பொழுது போனால் பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம். அது என்ன?

சுடோக்கு எண் 53 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 5 | 7 | 1 | 6 | 4 | 2 | 3 |
| 6 | 4 | 7 | 9 | 3 | 2 | 1 | 8 | 5 |
| 1 | 2 | 3 | 8 | 4 | 5 | 7 | 9 | 6 |
| 4 | 7 | 6 | 3 | 2 | 9 | 5 | 1 | 8 |
| 5 | 8 | 2 | 1 | 7 | 4 | 3 | 6 | 9 |
| 3 | 1 | 9 | 5 | 6 | 8 | 2 | 7 | 4 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 6 | 4 | 7 |
| 2 | 6 | 8 | 4 | 5 | 7 | 9 | 3 | 1 |
| 7 | 3 | 4 | 6 | 9 | 1 | 8 | 5 | 2 |

சுடோக்கு எண் 54

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | 4 | | 2 | 5 | | 1 |
| 5 | | | | | | | | |
| | 1 | | | 8 | | 7 | | |
| 1 | 9 | | | 2 | 8 | 6 | | |
| | | | | | | | | |
| | | 3 | 1 | 7 | | | 9 | 8 |
| | | 6 | | 3 | | | 5 | |
| | | | | | | | | 4 |
| 7 | | 5 | 8 | | 6 | 3 | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**







கடந்தவாரம் நடைபெற்ற சுன்னாகம் 'வாழ்வகம்' இல்லத்தின் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் நினைவுதின நிகழ்வின்போது இல்லத்தின் தலைவர் ஆ. ரவீந்திரன், இல்லத்தின் உபதலைவர் திருமதி. மோகனவதனி ரவீந்திரன் ஆகியோர் ஸ்தாபக அம்மையாரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதையும், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றுவதையும், நிகழ்வின் சிறப்பு அம்சமாக இடம்பெற்ற வாழ்வகம் இல்லப் பிள்ளைகளின் நடன நிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.

# அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்லும் இலங்கை அகதிகள் அப்பாவிகள்

**- த ஹிந்து பத்திரிகை**

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் அறியாமை காரணமாகவே அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் அழைத்துச் செல்லும் நடவடிக்கைக்கு ஆட்படுகின்றனர் இவ்வாறு த ஹிந்து தெரிவித்துள்ளது.

தமிழக அரசாங்கத்தின் பராமரிப்பில் உள்ள இவர்கள் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் நிலையில் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜூன் 6 ஆம் திகதி கொல்லம் என்ற இடத்தில் 121 பேர், ஆகஸ்ட் 17 ஆம் திகதி காஞ்சிபுரத்தில் 61 பேர், ஆகஸ்ட் 28 ஆம் திகதி கூடலூரில் 28பேர், செப்டம்பர் மங்களூரில் 80பேர் இறுதியாக நாகப்பட்டணத்தில் 65 பேர் என்ற அடிப்படையில் இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் போது கைதுசெய்யப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த அகதிகளுக்கு அங்கு அண்மைக் காலத்தில் அகதிகள் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்கள், மற்றும் அந்த நாட்டுக்கு செல்வோர் பசுபிக் தீவுகளுக்கு மாற்றப்படுதல் போன்ற விடயங்கள் தெரிந்திருக்கவில்லை.

எனவே ஆட்கடத்தல்காரர்களின் பொய்யான உறுதிமொழிகளுக்கு உட்பட்டு இந்த அகதிகள் ஒஸ்திரேலியாவுக்கு செல்ல துணிவதாக த ஹிந்து குறிப்பிட்டுள்ளது.

# ஜனாதிபதி மஹிந்தவிற்கு ஆபத்து சஜின்வாஸ் குணவர்தன முறைப்பாடு!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன முறைப்பாடு செய்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவினரிடம் சஜின் வாஸ் குணவர்த்தன இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

கடந்த வார இறுதியில் ஆங்கில பத்திரிகையொன்றில் ஜனாதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய வகையில் தேவையற்ற கேலிச்சித்திரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக மக்களை தூண்டும் வகையில் சிலர் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளனர். ஜனாதிபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

# வாகன மோசடிகளைத் தடுக்க விசேட இணையத்தளம்

நாட்டில் இடம்பெறும் வாகன மோசடியைத் தடுப்பதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் விசேட இணையத்தளமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் ஆணையாளர்நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திர இத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த இணையத் தளத்தினூடாக குறித்த ஒரு வாகனம் பற்றிய முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்குமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாகனத்தை கொள்வனவு செய்யவுள்ளோர் குறித்த வாகனத்தின் இலக்கத்தை மேற்படி இணையத்தளத்தில் பதிவு செய்ததும் அந்த வாகனம் தயாரிக்கப்பட்டது முதல் இறக்குமதி செய்யப்பட்ட தினம், அதனைக் கொள்வனவு செய்தவர்கள் உட்பட்ட அனைத்து விபரங்களையும் விளக்கமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். இதற்கென கடனட்டையில் 500 ரூபாவினை கட்டணமாக செலுத்த வேண்டுமெனவும் திணைக்களத்தின் ஆணையாளர்நாயகம் கூறினார்.

இத்திட் டம் பழைய மற்றும் திருட்டு வாக னங்களை கொள்வனவு செய்து ஏமாற்றமடைவதை தடுப்பதற்கு பேருதவியாக அமையுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை மூலம் பெரும் பகுதி புலிகளின் வசப்பட்டது

**-பசில் ராஜபக்ஷ**

சர்வதேச ரீதியில் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்த படையினரைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமைத்துவம் வழங்கினாலும் நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தியில் நாட்டை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கினை முப்படையினரே வகித்து வருகின்றனர் என தெரிவித்துள்ள அமைச்சர் அவர்களுக்காக நாடளாவிய ரீதியில் 50,000 வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திபுலபிட்டியவில் படையினருக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளைக் கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் திவுலப்பிட்டிய ஹுணுமுல்ல மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

2005 நவம்பர் 17 ஆம் திகதி நாட்டு மக்கள் நாட்டின் ஆட்சியதிகாரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தனர். அவர் அதைப் பொறுப்பேற்கும் போது நாட்டின் பூமிப் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே இருந்தது.

அதே போன்று கடற் பரப்பில் மூன்றில் ஒரு பகுதியே அரச நிர்வாகத்திடம் இருந்தது.

ரணில் - பிரபாகரன் உடன்படிக்கை மூலம் நாட்டின் மீதான பகுதி உத்தியோகபூர்வமாக புலிகளின் நிர்வாகப் பிரதேசமென ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது எனவும் அவர் கூறினார்.

# தேசிய அரசாங்கம் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்து

கிழக்கு மாகாணத்தில் அனைத்துக் கட்சிகளும் பங்குபெறும் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

காலத்தைக் கடத்தாமல் அரசாங்கம் வடக்கு மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டும் என்று அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஜயலத் ஜயவர்தன உள்ளிட்ட குழுவினர் கொழும்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை மற்றும் அவற்றுக்கான கால எல்லை தொடர்பில் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன குறிப்பிட்டார்.

நாட்டின் இனப்பிரச்சனை தீர்வுக்காக நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைப்பது தொடர்பிலும் அதன் நிகழ்ச்சி நிரல் மற்றும் அவற்றுக்கான கால எல்லை தொடர்பிலும் அரசாங்கம் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் பதவியை இரண்டு ஆண்டுகளுக்கு தமிழர் ஒருவருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முஸ்லிம் ஒருவருக்கும் ஓராண்டுக்கு சிங்களவர் ஒருவருக்கும் வழங்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

இந்த நிலையில் தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி ஜனாதிபதி அழைத்தால் அதுபற்றி பேசிப் பார்க்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் பதிலளித்திருந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பத்து ரயில் நிலையங்கள் சர்வதேச தரத்துடன் புனரமைப்பு

அதிக வருமானம் ஈட்டும் பத்து ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தி பிரயாணிகளுக்கு சகல வசதிகளையும் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படுமென ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்

கொழும்பு, கோட்டை, மருதானை, ராகமை, கம்பஹா, வெயாங் கொடை, அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, கண்டி, காலி ஆகிய ரயில் நிலையங்களே இவ்வாறு நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் சர்வதேசதரத்துக்கு ரயில் சேவைகளை வழங்கவும் ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.


# புள்ளிவிபர உத்தயோகத்தர் தெரிவுப் பரீட்சை

**சண்டிலிப்பாய்**

புள்ளிவபர உத்தியோகத்தர் தரம் இரண்டிற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது இம் மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் கொழும்பில் நடை பெறவுள்ளது.

பொது உளச்சார்பு, பொது அறிவு என்னும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்ட இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தினால் சம்பந்தப்பட்ட பரீட் சார்த்திகளிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# ஈக்வடார் தூதரகத்தில் தான் தொடர்ந்து தஞ்சம்: அசாஞ்ச்



அமெரிக்கா உட்பட பல நாடுகள் குறித்து பல்வேறு ரகசிய தகவல்களை தனது விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்ச்.

இந்நிலையில் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக அசாஞ்ச் மீது சுவீடனில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் சுவீடனுக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சமடைந்த அசாஞ்ச், லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார்.

தூதரகத்தில் இருந்து அவர் வெளியே வந்தால் கைது செய்யலாம் என லண்டன் பொலிசார் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் தொலைக்காட்சி ஒன்றிற்கு அவர் அளித்துள்ள பேட்டியில், நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை மூலமே இப்பிரச்சினை தீர வேண்டும்.

இல்லாவிட்டால் எதிர்பாராத உலக நிகழ்வுகளால் தான் மாற்றம் வரலாம். அதாவது ஈரானுடன் போர் ஏற்பட்டாலோ, அமெரிக்க தேர்தல் நேரத்திலோ, சுவீடன் அரசு இந்த வழக்கை கைவிட்டாலோ இப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கலாம்.

இவற்றில் மூன்றாவதாக கூறியது நிகழ அதிக வாய்ப்பு உள்ளது. இந்த வழக்கு குறித்து தீர விசாரித்த பிறகு சுவீடன் அரசு இதைக் கைவிடலாம்.

இதற்கு 6 முதல் 12 மாதங்கள் வரை ஆகும். எனவே, ஓராண்டுக்கு நான் ஈக்வடார் தூதரகத்திலேயே தங்க வேண்டியிருக்கலாம் என்றார்.

# பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரின் அந்தரங்க புகைப்படங்களும்: ஊடக தர்மங்களும்




மலேசியா, சிங்கப்பூர் விஜயத்தை முடித்துக்கொண்டு கிழக்காசியாவின் சொலொமன் தீவுகளில் தமது அடுத்த சுற்றுலாவை நகர்த்தியிருக்கிறார்கள் வில்லியம்- கேட் பிரிட்டிஷ் அரச தம்பதியினர்.

மறுமுனையில், பிரான்ஸ், மற்றும் ஐரிஷ் செலிபிரிட்டி சஞ்சிகைகளை தொடர்ந்து இத்தாலியின் Chi சஞ்சிகையும் கேட் மிடில்டனின் மேலாடை இல்லாத 50 க்கு மேற்பட்ட புகைப்படங்களை வெளியிடப்போவதாக அறிவித்துள்ளது. அதுவும் இளவரசியரே நேரில் வந்து கூறினாலும், இப்புகைப்படங்களை வெளியிடுவதை தடுக்க முடியாது என அந்த சஞ்சிகையின் ஆசிரியர் அல்போன்ஸோ கூறியுள்ளார்.

இப்புகைப்படங்களை முதலில் வெளியிட்ட பிரான்ஸின் குளோசர் சஞ்சிகையின் புதிய இதழ்கள் 31.25 யூரோவுக்கு நடீயல இணையத்தளத்தில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் முன்னைய சாதாரண விலை 1.20 யூரோக்கள் மட்டுமே.

இதில் வேடிக்கையான இன்னொரு விடயம் இந்த குளொசர் பத்திரிகையின் உரிமையும், தற்போது அச்சுறுத்தியிருக்கும் இத்தாலியின் ஊாை பத்திரிகையின் உரிமையும் Marina என்பவரிடம் இருக்கிறது. இவர் வேறு யாருமல்ல. முன்னாள் இத்தாலிய பிரதமர் சில்வியோ பேர்லுஸ்கோனியின் மகள் தான். ஆக மொத்தத்தில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் அந்தரங்க பெருமைகளை தெருவுக்கு கொண்டுவரும் அரசியல் சூட்சுமம் ஒன்று இப்புகைப்படங்களில் ஒழிந்திருக்கிறது என பிரிட்டிஷ் ஊடகங்கள் விமர்சிக்கின்றன. ஆனால் பேர்லுஸ்கோனிக்கும் பிரிட்டிஷ் இராஜ குடும்பத்தின் மேல் நல்ல மரியாதை இருந்து வந்திருக்கிறது என்கிறது கடந்த கால அரசியல் சாட்சிகள்.

இந்நிலையில் பிரான்ஸ் கோடை விடுமுறை சுற்றுலாவின் போது கேட் மிடில்டனை மேலாடை இல்லாது படம் பிடித்த அந்த இரகசிய புகைப்பட காரர் ஒரு பெண் என்பது மேலதிக தகவல். கிட்டத்தட்ட 200 க்கு மேல் புகைப்படம் எடுத்து தள்ளியிருக்கிறார். இதில் இத்தாலியின் ஊாை சஞ்சிகை வெளியிடப்போவது சுமார் 50 திரைப்படங்கள். இவற்றை 26 பக்கங்கள் கொண்ட ஸ்பெஷல் சஞ்சிகையில் வெளியிட போகிறதாம். புகைப்பட காரர் மீது கிரிமினல் குற்றச்சாட்டின் கீழ் கேட் வில்லியம் - மிடில்டன் தம்பதியினர் வழக்கு தொடர்ந்துள்ளனர், அந்த புகைப்படகாரர் எங்கிருந்தாலும் கைது செய்து சிறையில் தள்ள வேண்டும் என்பது அவரது வில்லிமின் கோபம் கலந்த குற்றச்சாட்டு.

குறித்த இத்தாலியின் ஊாை சஞ்சிகையே, முன்னாள் இளவரசியார் டயானா, கார் விபத்தில் உயிரிழந்த போது விபத்து நடந்த சில நிமிடங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை முதன் முறையாக வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

இம்முறை கேட் மிடில்டனின் மேலாடை இல்லாத புகைப்படங்களை வெளியிடுவதில் Chi சஞ்சிகையின் இயக்குனர் சிங்னோரினி உறுதியாக இருக்கிறார். எந்தவொரு சஞ்சிகையிலும் இப்புகைப்படங்கள் வெளிவரக்கூடாது என அரச குடும்பத்தினர் தொடுத்த வழக்கு பாரிஸில் இன்று விசாரணைக்கு வரவுள்ளது. அப்படி இருந்தும் சிங்னோரினியின் முடிவில் மாற்றமில்லை. அவர் கூறும் காரணம் இது தான்.

இப்புகைப்படங்கள் தாக்குதல் செய்யவில்லை. கீழ்த்தரமாக எடுக்கப்படவில்லை. ஆரோக்கியமற்றதாகவும் இல்லை. யாருடைய கௌரவத்தையும் பாதிப்பதாக இல்லை. அந்த ஜோடியினர் பொது சுற்றுலா தளத்தில், பொது இடத்தில் தான் இருந்தனர். இதனால் இந்த புகைப்படங்கள் ஒருவரின் தனிப்பட்ட அந்தரங்கம் மீதான ஆக்கிரமிப்பு எனும் குற்றச்சாட்டை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அத்தெரு வழியே போய் வரும் எவர் வேண்டுமானாலும் அந்த நேரத்தில் இவர்களை இக்கோலத்தில் படம் பிடித்திருக்க முடியும். எனக்கு ஊடக பெறுமதி தெரியாது என்று நீங்கள் கருதினால், நான் இப்புகைப்படங்களை சாதாரண மரக்கறி சந்தையில் விற்றுவிட்டு சென்றுவிட முடியும். என்கிறார் அவர்.

இதேவேளை கேட் மிடில்டனின் மேலாடை இன்றிய புகைப்படங்களை, வேறு நாட்டு சஞ்சிகைகள் இவ்வாறு பிரசுரிக்க முனைவதற்கு எதிர்ப்பும், சில நேர்மறை விமர்சனங்களும் ஒருங்கே குவிந்து வருகிறது.

இந்த புகைப்படங்களை எடுத்த பெண்ணையும், பிரசுரிக்க ஆர்வம் காட்டும் சஞ்சிகையின் ஆசிரியர்களையும் இவ்வாறு நிர்வாண கோலத்தில் எடுத்து உலகெங்கும் பகிர்வோம். அப்போது தான் தெரியும் இந்த வேதனை என்கிறார் ஒரு பிரித்தானிய வாசகர்.

உங்களுக்கு மட்டும் உரித்தான தனிப்பட்ட இடமொன்றில் இப்புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருந்தால் அதை தனிநபர்களின் அந்தரங்கத்தில் தலையீடு எனலாம். ஒரு பொதுவான கடற்கரையில் இக்கோலத்தில் நீங்கள் இருந்தால் அது யார் தவறு? எப்போதும் எந்தவொரு சிறிய பொது நிகழ்வுக்கும் கூடவே புகைப்படக்காரர்களை அனுமதிக்கிறீர்கள். கூட்டிச்செல்கிறீர்கள். இப்படி ஒரு விவகாரம் வரும் என முன்னரே தெரியவில்லையா? உங்களது கோடை விடுமுறை எப்பொது, எங்கு, எப்படி இருக்க வேண்டும் என்பது பிரிட்டிஷ் அரச அதிகார வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரல் திட்டம். அவர்கள் தான் அனைத்து முடிவுகளும் எடுக்கிறார்கள். இதை மீறி வெளியே வரமுடியாததால் தான் இந்த வினை வந்திருக்கலாம் என்கிறார் மற்றுமொரு வாசகர்.

# உலக பார்வை

## நீதிமன்ற உத்தரவையும் மீறி நடந்த சிம்பாப்வே பிரதமரின் 2வது திருமணம்



நீதிமன்ற உத்தரவினையும் மீறி ஜிம்பாப்வே பிரதமர் தனது திருமணத்தை கோலாகலமாக கொண்டாடினார்.

ஜிம்பாப்வேயின் பிரதமர் மொர்கன் ஸ்வான்கிராய்(வயது 60). இவர் அந்நாட்டு ஜனாதிபதி ரூபர்ட் முகாபோயின் ஜானு மக்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் 35 வயது மகள் எலிசபெத் மிச்சிகா என்பவரை திருமணம் செய்யப் போவதாக செய்திகள் வெளியாயின.

ஜிம்பாப்வே நாட்டு பழங்குடியின சட்டத்தின் படி ஒருவர் ஒருமுறையே திருமணம் செய்ய முடியும். பலதார திருமணத்திற்கு அனுமதியில்லை என்பதால் பிரதமரின் இரண்டாவது திருமணத்தினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

நீதிமன்றமும் திருமணத்திற்கு தடைவிதித்து உத்தரவிட்டது.

எனினும் தனது முதல் மனைவி கடந்த 2009ஆம் ஆண்டு கார் விபத்தில் இறந்ததால், இரண்டாவது திருமணம் செய்ய முடிவு செய்ததாக தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவினையும் மீறி பிரதமர் ஸ்வான்கிராய், தலைநகர் ஹராரே நகரில், எலிசபெத் மிச்சிகாவை (வயது35) திருமணம் செய்து கொண்டார். இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டனர். இதில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## அமெரிக்க தூதரகங்களை தொடர்ந்து தாக்குவோம்

### அல்கொய்தா கடும் எச்சரிக்கை

அரபு நாடுகளிலும், மேற்கத்திய நாடுகளிலும் உலகின் பிற நாடுகளிலும் உள்ள அமெரிக்க தூதரங்களை தொடர்ந்து தாக்குவோம் என அல்கொய்தா அறிவித்துள்ளது.

இஸ்ரேலிய அமெரிக்கர் ஒருவர் எடுத்த படத்தால் இன்று உலகம் முழுவதும் இஸ்லாமியர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் சம்பாதித்துள்ளது அமெரிக்கா.

நபிகள் நாயகத்தையும், இஸ்லாமையும் கடுமையாக விமர்சித்து எடுக்கப்பட்ட அந்தப் படத்தால் உலக நாடுகள் முழுவதும் அமெரிக்காவுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளன. அமெரிக்க தூதரகங்கள் தாக்கப்பட்டு வருகின்றன. லிபியாவில் அமெரிக்க தூதர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், தாக்குதல் தொடரும் என்று அல்கொய்தா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் அரபுப் பிரிவு விடுத்துள்ள எச்சரிக்கையில், உலகம் முழுவதும் உள்ள அமெரிக்க தூதரகங்களைத் தாக்குவோம். ஒரு தூதரகத்தையும் விட மாட்டோம்.

உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் இதைச் செய்ய வேண்டும், செய்வார்கள் என்று அது எச்சரித்துள்ளது.

இதையடுத்து உலக நாடுகளில் உள்ள தனது தூதரங்களில் பாதுகாப்பை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளை அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கிடையே முன்னெச்சரிக்கையாக சூடான், துனிஷியா நாடுகளில் உள்ள தனது தூதரகங்களில் பணியாற்றி வரும் முக்கியத்துவம் உள்ள ஊழியர்களை அமெரிக்கா திரும்புமாறு உத்தரவிட்டுள்ளது அமெரிக்க அரசு.



மியான்மரின் எதிர்க்கட்சி தலைவர் ஆங் சாங் சூகி (மத்தியில்), அமெரிக்கா செல்ல யாங்கோன் சர்வதேச விமானம் நிலையம் வந்த அவரை ஆதரவாளர்கள் வழியனுப்ப வந்தனர்.

## சல்மானின் தலைக்கு 3.3 மில்லியன்

இந்தியாவில் பிறந்து பிரிட்டன் நாட்டு குடியுரிமை பெற்று வாழ்ந்து வருபவர் முஸ்லிம் எழுத்தாளர் சல்மான்ருஷ்டி.தற்போது தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ள தி இன்னசன்ஸ் ஆப் முஸ்லீம்ஸ் என்ற திரைப்படம் உலகம் முழுவதும் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.இதுபோன்று முகமது நபிக்கு எதிராக எழுதுபவர்களை மிரட்டும் வகையில் எச்சரிக்கையாக எழுத்தாளர் சல்மான் ரஷ்டியின் தலைக்கு அதிக பட்சமாக 3.3 மில்லியன் டொலர் வழங்கப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது.

# இளம் முதல்வர் அகிலேஷின் ஆட்சியில் அரங்கேறிய 2,437 கொலைகள்


நாட்டின் இளம் முதல்வராக அகிலேஷ் பதவியேற்ற 6 மாதங்களில் உத்தர பிரதேச மாநிலத்தில் 2437 கொலைகள் நடந்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் உத்தர பிரதேச மாநிலத்தில் நடை- பெற்ற சட்ட மன்ற தேர்தலில் சமாஜ்வாடி கட்சி வெற்றி பெற்றது.

கட்சியின் தலைவரான முலாயம் சிங் யாதவின் மகனான அகிலேஷ் யாதவ் அம்மாநில முதல்வராக பதவியேற்றார். பதவியேற்றபோது மாநில சட்டம், ஒழுங்கு கட்டிகாக்கப்படும் என உறுதியளித்தார் அகிலேஷ்.

ஆனால் கடந்த 6 மாதங்களில் நடந்துள்ள குற்றச்சம்பவங்கள் அவரது ஆட்சிக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த மாதங்களில் முலாயம் சிங், தனது அமைச்சரவையைக் கூட்டி இந்த ஆட்சி தனக்கு திருப்தி அளிக்க வில்லை என தெரிவித்திருந்தார் என்பது குறிப்



பிடத்தக்கது.

அகிலேஷ் ஆட்சியில் அரங்கேறிய குற்றங்கள்:

முதல்வராக அகிலேஷ் பதவியேற்ற கடந்த 6 மாதங்களில் இதுவரை 2,437 கொலைகள், 1100 பெண்களுக்கு எதிரான வன்கொடுமை வழக்குகள், 450 கொள்ளை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

அது மட்டுமல்ல ரேபரேலி, கோஸிகலான் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நடந்த வன்முறை சம்பவங்களால், சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அகிலேஷ் அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்கள் கடும் குற்றப்பின்னணி உடையவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியான அடுத்த நாளன்று, வெற்றி பெற்ற ஒரு சமாஜ்வாடி கட்சி எம்.எல்.ஏ.ஒருவர் தனது வெற்றியை கொண்டாட துப்பாக்கியால் வானத்தை நோக்கி மூன்று முறை சுட்டார்.

இதைத்தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் ஒருவர் பலியானார். அப்போதே ரௌடிகள் ராஜ்யம் தொடங்கிவிட்டதாக உத்தர பிரதேசத்தில் கூறப்பட்டது.

நேற்று காஸியாபாத் நகரின் மசூரி பொலிஸ்நிலையத்தை ஒரு கும்பல் முற்றுகையிட்டனர்.

இதில் பொலிஸாரின் நடவடிக்கை தாமதம் ஆனதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். 12 பேர் காயமடைந்தனர்.



# இந்திய செய்திகள்

## முஸ்லிம்களை இழிவுபடுத்திய அமெரிக்கா மன்னிப்பு கேட்க வேண்டும்: வைகோ



நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தி எடுக்கப்பட்ட படத்துக்காக அமெரிக்க அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், மனித குலம் போற்றுகின்ற நபிகள் நாயகத்தை மிகவும் மோசமாக இழிவுபடுத்தி அமெரிக்காவில் நக்கோலா பசிலி என்பவர், அப்பாவி இஸ்லாமியர்கள என்ற திரைப்படத்தை எடுத்துள்ளார்.

ஆலன் ராபர்ட் என்பவர் இயக்கிய இந்தப் படம் உலகெங்கும் வாழும் மக்களின் நெஞ்சில் நெருப்பைக் கொட்டியது போல் இருக்கிறது.

இந்தப் படம் அரசின் வெளியீடு இல்லை என்றும், தனி மனித சுதந்திரத்தில் தலையிட முடியாது என்று அமெரிக்க அரசாங்கம் கூறுகிறது. இது அக்கிரமமாகும். எனவே அமெரிக்க அரசு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இந்தப் படத்தைத் தயாரித்தவர்களைக் கைது செய்ய வேண்டும். படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று வைகோ கூறியுள்ளார்.

# அமெரிக்காவை விட இந்தியாவை நம்பலாம்:

## - பாகிஸ்தான் விஞ்ஞானி

இந்தியாவுடன் பாகிஸ்தான் நட்புறவை மேம்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் அணு விஞ்ஞானி ஏ.க்யூ.கான் கூறியுள்ளார்.

தற்போது அமெரிக்காதான் பாகிஸ்தானில் பிரச்சனை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்த அவர், அமெரிக்கா மீது நம்பிக்கை வைப்பதை விட, இந்தியாவுடன் நட்பாக இருப்பது பலனளிக்கும் என்றார்.

இந்தியாவில் 1998ம் ஆண்டில் இந்தியா அணுகுண்டு பரிசோதனை மேற்கொண்டபோது பாகிஸ்தானும் அணுகுண்டு சோதனை மேற்கொண்டது.

பாகிஸ்தான் மேற்கொண்ட அணுகுண்டு சோதனையின் போது ஏ.க்யூ. கானே தலைமை பொறுப் பில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் இந்தியா- பாகிஸ்தான் உறவுகள் வலுவடைந்து வருகிறது. சமீபத்தில் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் பாகிஸ்தான் பயணத்தின் போது, இந்தியர்களுக்கான விசா நடைமுறைகள் தளர்த்தப்பட்டது.

மேலும் பாகிஸ்தான் சிறைக- ளில் நீண்ட ஆண்டுகளாக வாடிய இந்திய கைதிகள் விடுதலையானதும் குறிப்பிடத்தக்கது.

# கார்ட்டூன் வரைவதை நிறுத்தமாட்டேன்: ஆசீம் திரிவேதி

தேசிய சின்னத்தை அவமதிப்பது போன்ற கார்டூன் வரைந்ததாக ஆசீம் திரிவேதி (26) என்பவர் கடந்த வாரம் மும்பை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமினில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் தன்னுடைய சொந்த ஊரான கான்பூர் அருகேயுள்ள அன்னாவ் மாவட்டத்திற்கு சென்றார்.

அங்கு அவரை அவரது பெற்றோர்கள் மற்றும் ஏராளமான கிராம மக்கள் கூடி நின்று வரவேற்றனர்.

அப்போது பேசிய ஆசிம், கைதுக்கு நான் பயப்படமாட்டேன்.

ஊழலுக்கு எதிராக தொடர்ந்து என்னுடைய கார்ட்டூன்கள் வெளியாகும். மேலும் தனது கார்ட்டூன் மக்களிடத்திலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது என்று கூறினார்.

# இந்திய விண்வெளி வீராங்கனை சுனிதாவின் உரையாடல்

சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து இந்திய வீராங்கணை சுனிதா வில்லியம்ஸ் தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்.

அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா, சர்வதேச விண்வெளி மையத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளை சரி செய்ய சுனிதா தலைமையிலான குழுவை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

இந்தியாவை பூர்வீகமாக கொண்ட இவர், சமீபத்தில் இந்தியாவின் சுதந்திர தினத்தில் தேசியக்கொடியை விண்வெளி மையத்தில் ஏற்றினார்.

இந்நிலையில் விண்வெளியில் வசிக்கும் தனது அனுபவங்களை யுரியூப்பின் ஸ்பேஸ் லேப் சானலின் வழியாக பகிர்ந்து கொள்கிறார்.



மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் இவரது உரையாடல் அமைந்துள்ளது.



மழை பொழிய வேண்டி, அவிநாசியிலுள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் சார்பில், கஞ்சி கலய ஊர்வலம் நடந்தது.

# சீர்திருத்தங்களால் பலன் என்ன?

## பிரதமர் விளக்கம்

சில்லரை வர்த்தகத்தில், அன்னிய நேரடி முதலீட்டை மத்திய அரசு அனுமதித்ததை அடுத்து, அனைத்து தரப்பில் இருந்தும் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், பிரதமர் மன்மோகன் சிங், கடந்த, 10 ஆண்டில், அரசு மேற்கொண்ட சீர்திருத்தங்களால், மக்கள் அடைந்த பலன்களை பட்டியலிட்டுள்ளார்.

இதுகுறித்து, "டுவிட்டர்" வலைதளத்தில், அவர் கூறியுள்ளதாவது:மத்திய அரசு, 10 ஆண்டுகளாக, மேற்கொண்ட சீர்திருத்தங்களால், 7.7 கோடி மக்களுக்கு



வங்கி வசதி கிடைத்துள்ளது. 3.4 கோடி மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன் ஆறு கோடி மக்களுக்கு, மின்சார வசதி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. மேலும், 3.7 கோடி மக்களுக்கு சமையல் காஸ் இணைப்பும், 13.7 கோடி மக்களுக்கு தொலைபேசி இணைப்பும் கிடைத்துள்ளது. இவ்வாறு பிரதமர் கூறியுள்ளார்.

# காலாவதியான மாத்திரையை சாப்பிட்ட பள்ளி மாணவி பரிதாப சாவு

ஆந்திர மாநிலம் செகந்திராபாத்தை சேர்ந்த குஷ்பூ 10, என்ற 5ம் வகுப்பு மாணவி அங்குள்ள மார்வாரி இந்தி பாட சாலையில் படித்து வந்தாள்.

இந்நிலையில் மாணவ- மாணவிகளுக்கு நோய் தடுப்பு மாத்திரை வழங்கப்பட்டது.

அதை சாப்பிட்ட சிறுமி கு்பூ திடீரென மயங்கி விழுந்தாள். உடனே அவளை ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவள் ஏற்கனவே இறந்து விட்டதாக டொக்டர்கள் தெரிவித்தனர்.

மாத்திரை தொண்டையில் சிக்கி அதனால் ஏற்பட்ட மூச்சு திணறலால் இறந்ததாக மருத்துவமனை தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் இதை மாணவி குஷ்பூவின் பெற்றோரும், உறவி- னர்களும் மறுத்துள்ளனர்.

காலாவதியான மாத்திரையை கொடுத்ததால் தான் அவளது உயிர் பறிபோனது என புகார் கூறியுள்ளனர்.எனவே இச்சம்பவம் குறித்து பொலிஸ் விசாரணை நடத்தப் பட்டு வருகிறது.

இதற்கிடையே மரணமடைந்த சிறுமி குஷ்பூவின் குடும்பத்துக்கு அரசின் சார்பில் 'ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் இழப்பீடு தொகையை ஐதராபாத் மாவட்ட கலெக்டர் முர்தஷா ரிஷ்வி வழங்கினார்.

# இணுவில் இந்துவின் வெற்றிக்கிண்ணம் கொக்குவில் பொற்பதி இந்து சம்பியன்

வலிகாமம்

இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்திய அணிக்கு 7 பேர் பங்குபற்றும் ஆறு ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டத்தில் இந்துவின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் கைப்பற்றிக்கொண்டது.



இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் ஆட்டத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகமும கொக்குவில பொற்பதி இந்து விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகம் ஆறு ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 40 ஓட்டங்களை பெற்றது.

சாந்தன் 11 சைலேஸ்வரன் 7, திவாகர் 6 ஓட்டங்களை பெற்றனர்.

பொற்பதி இது விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தீபன் 2 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சத்தியன் ஒரு ஓவர் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்க துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் 4.4 ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டமிழக்காது சத்தியன் 29, சுபாஸ்கரன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த துசாறி 2 ஓவாகள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாகவும் தொடர் ஆட்டநாயகனாகவும் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த சத்தியன் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றி பெற்றவாகளுக்கான சம்பியன் கிண்ணத்தை வலி. தெற்கு உடுவில் பிரதேச சபையின் தலைவர் தி.பிரகாஷ் வழங்கி கௌரவித்தார்.

# யாழ். இந்துவுக்கு அதிரடி வெற்றி

தெல்லிப்பழை

மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளிற்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரியும் ஹாட்லிக் கல்லூரியும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை மோதின. இப் போட்டியில் நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்துக் கல்லூரியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து

மதுசனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையான 200 ஓடங்களைப் பெற்றுக் கொண்டது. இந்துக் கல்லூரி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய மதுசன் 60 ஓட்டங்களையும் சஜீகன் 48 ஓட்டங்களையும் நிலோஜன் 30 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஹாட்லிக் கல்லூரி சார்பாக அருள்ராஜ் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும் நிரோஷன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

201 என்னும் வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 146 ஓட்டங்களிற்குள் சகல விக்கெற்றுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

ஹாட்லிக் கல்லூரி சார்பாக துடுப்பாட்டத்தில் சுஜிவன் 33ஓட்டங்களையும் ஆனந்தசஜன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் இந்துக் கல்லூரி அணி சார்பாக மதுஷன் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுககளையும் சிந்துஜன் 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் இந்துக் கல்லூரி 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹாட்லிக் கல்லூரியைத் தோற்கடித்தது.

# இறுதியாட்டத்தில் வெல்லும் வித்தையை நாம் அறிவோம் -ஏஞ்சலோ மத்தியூஸ்

இறுதியாட்டத்தில் வெற்றிபெறுவது எவ்வாறு என்பது குறித்து இலங்கை அணிக்குத் தெரியும் என இலங்கை அணியின் உப தலைவர் ஏஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக இறுதிப் போட்டிகளில் இலங்கை அணி தோல்வியடைவது குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்த இலங்கை அணி, 2009ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரின் இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் தோல்வியடைந்திருந்தது.

அதன் பின்னர் 2011ஆம் ஆண்டு உல கக்கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி இந்தியாவிடம் தோல்வியடைந்திருந்தது.

எனினும் குறித்த தோல்விகளைச் சிறந்த அனுபவமாக தான் கருதுவதாகத் தெரிவித்த ஏஞ்சலோ மத்தியூஸ், இம்முறை இறுதிப் போட்டிகளுக்கான வாய்ப்புக் கிடைக்கப்பெற்றால் அதில் எவ்வாறு வெற்றிபெறுவது என்பது குறித்து இலங்கை அணிக்குத் தெரியும் என எண்ணுவதாக உப அணித்தலைவர் ஏஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்தார்.

எனினும் தற்போதைய நிலையில் இறுதிப் போட்டிகளைப் பற்றி இலங்கை அணி சிந்திக்கக் கூடாது எனத் தெரிவித்த அவர், ஒவ்வொரு போட்டிகளாக இலங்கை அணி தனது கவனத்தைச் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் என்ன காரணங்களுக்காக முக்கிய இறுதிப் போட்டிகளில் தங்களால் வெற்றிபெற முடியாது போனது என்பது குறித்து ஒரு காரணத்தைக் குறிப்பிட முடியாது எனத் தெரிவித்த ஏஞ்சலோ மத்தியூஸ், ஆனால் அணியாக இணைந்து விளையாடுவதுடன், மகிழ்ச்சியாகக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றினால் வெற்றிபெற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.





சண்டிலிப்பாய் மணிமோகன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் ஜெபநேசன் மற்றும விருந்தினாகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும்

முன்பள்ளிச்சிறார்களின் இசைவும் அசைவும் மற்றும் உடற்பயிற்சிக் கண்காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வலிகாமம்நிருபர்)

# டெக்கானின் ஒப்பந்தம் ரத்து பி.சி.சி.ஐக்கு எதிராக வழக்கு

டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஒப்பந்தத்தை ரத்து செய்த இந்திய கிரிக்கெட் சபையின் முடிவை எதிர்த்து, அந்த அணி உரிமையாளர்கள் சார்பில் மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சார்ஜர்ஸ் அணியை பி.வி.பி வென்சர்ஸ் நிறுவனம் 900 கோடி இந்திய ரூபா வாங்க விருப்பம் தெரிவித்த நிலையில், நிபந்தனைகள் ஏற்கத்தக்க வகையில் இல்லை என்று கூறுவிலை பத்திரத்தை சார்ஜர்ஸ் நிர்வாகம் நிராகரித்தது.

இது குறித்து, சென்னையில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஐ.பி.எல் நிர்வாகக் குழு அவசர கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. பின்னர், சார்ஜர்ஸ் அணியின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதாக கிரிக்கெட் சபை அதிரடியாக அறிவித்தது.

இதை எதிர்த்து சார்ஜர்ஸ் நிர்வாகம் சார்பில் மும்பை உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர்.

# அளவெட்டி மத்திய வி.கவின் மென்பந்தாட்டம் அரையிறுதிக்கு முன்னேறியது ஞானம்ஸ் அணி

தெல்லிப்பழை

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நியூ நெல்சன் லேணர்ஸ் பிரதான அனுசரனையுடன் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடாத்தும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாம் ஆட்டத்தில் “சி“ பிரிவிற்கான போட்டிகள் கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

“சி“ பிரிவிற்கான முதல் போட்டியில் காமாட்சி அணியும் கண்ணகி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கண்ணகி அணி 8 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப்பெற்றது. 40 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 5 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்களைப்பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் பொற்பதி இந்து அணியும் ஞானம்ஸ் “பி“ அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் “பி“ 8 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டத்தை பெற்றது. 108 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து 8 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப்பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மூன்றாவது போட்டியில் காமாட்சி அணியும் அளவெட்டி ஞானவைரவர் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் அணி 8 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டத்தை பெற்றது. 56 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 8 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 46 ஓட்டங்களைப்பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நான்காவது போட்டியில் ப்ளு ஸ்ரார் அணியும் ஒக்ஸ்பேர்ட் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ப்ளு ஸ்ரார் அணி 8 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 36 ஓட்டங்களைப்பெற்றது. 37 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய ஒக்ஸ்பேர்ட் அணி 7 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 37 ஓட்டங்களைப்பெற்று 4 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது போட்டியில் அளவெட்டி ஞானவைரவர் அணியும் ஞானம்ஸ் ட அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் “பி“ 8 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டத்தை பெற்றது. 66 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் அணி 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 51 ஓட்டங்களைப்பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆறாவது போட்டியில் பிரம்படி அணியும் கலைவாணி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பிரம்படி அணி 4 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 26 ஓட்டங்களைப்பெற்றது.27 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 6 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 27 ஓட்டங்களைப்பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஏழாவது போட்டியில் கலைவாணி அணியும் ஒக்ஸ்பேர்ட் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஒக்ஸ்பேர்ட் அணி 8 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப்பெற்றது.71 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 7.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

காலிறுதிப்போட்டியில் ஞானம்ஸ் “பி” அணியும் கலைவாணி அணியும் பலப்பரீட்சை நடாத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் “பி” அணி 8 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டத்தை பெற்றது. 77 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 6.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 31 ஓட்டங்களைப்பெற்றதனால் ஞானம்ஸ் “பி“ அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்று இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 18.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது